**வாடிக்கையாளர் நியதிகளும் நிபந்தனைகளும்**

இந்நியதிகளும் நிபந்தனைகளும் நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கிக்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் இடையிலான சட்டரீதியான உடன்படிக்கையொன்றினை ஆக்குவதுடன் (இதனகத்துப் பின்னர் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு) வாடிக்கையாளரொருவருக்கு நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி மூலம் வழங்கப்படும் FriMi சேவைகளை பயன்படுத்துவதை நிருவகித்தல் வேண்டும்.

**கீழே "ஏற்றுக்கொள்க" என்ற பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருமாறு ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார்:**

**இந்நியதிகளும் நிபந்தனைகளும் FriMi சேவைகள் தொடர்பிலான விபரங்களுடன் ஒன்றிணைத்து வாடிக்கையாளருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அத்துடன் அத்தகைய விபரங்களை வாடிக்கையாளர் வாசித்து புரிந்துகொண்டுள்ளார் என்றும் அவற்றின் மூலம் கட்டுப்படுவதற்கு இணங்கி சம்மதிக்கின்றார் என்றும்:**

1. **வரைவிலக்கணங்கள்**

   வேறு வகையில் குறித்துரைக்கப்பட்டாலன்றி இவ் ஆவணத்திலும் அத்துடன் **FriMi** ් சேவைகளை பயன்படுத்துவதுடன் தொடர்புடையது:

   அ. "**வாடிக்கையாளர்**" என்பது இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதன் மூலமும் அத்துடன் பிரிமி செயலியை பதிவிறக்கம் செய்து நிறுவுவதன் மூலமும் **FriMi** யில் கிடைக்கப்பெறுகின்ற தொழிற்பாடுகளை பயன்படுத்துவதற்கு தெரிவுகளை மேற்கொள்கின்ற எவரேனும் ஆள் அல்லது **FriMi** ් செயலியினை பதிவிறக்கம் மற்றும் நிறுவுகின்றதை மாத்திரம் செய்கின்ற ஆளொருவர் என பொருள்படும்.

   ஆ. "**நிறுவன வலைத்தளம்**" என்பது https://www.nationstrust.com/நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கியின் வலைத்தளம் என பொருள்படும்.

   இ. "**FriMi கணக்கு**" என்பது பிரிமி சேவைகளை அணுகும் அத்துடன் பிரிமி சேவைகளை பயன்படுத்தும் நோக்கங்களுக்காக பிரிமி மீது வாடிக்கையாளர் மூலம் உருவாக்கப்பட்ட (அத்துடன் ஏதேனும் வங்கி கணக்கு அல்லது வேறு கொடுப்பனவுச் சாதனம் அல்ல) பயனாளர் கணக்கு (அத்துடன்) என்று பொருள்படும்.

   ஈ. "**FriMi செயலி**" என்பது செல்லிட சாதனங்கள் மீது இயக்குவதற்கு வடிவமைக்கப்பட்ட அத்துடன் அனுமதிக்கப்பட்ட செயலி சேமிப்பகமொன்றில் பதிவிறக்கம் செய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற **FriMi** மென்பொருள் பிரயோகம் என்ற பொருள்படும்.

   உ. "**FriMi** ් **உதவி**" என்பது **FriMi** ් நோக்கங்களுக்காக NTB மூலம் தாபிக்கப்பட்ட, சேவை நிலையம் என்ற பொருள்படும், இதன் விபரங்கள் **FriMi** வலைத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

   ஊ. "**FriMi சேமிப்புக் கணக்கு**" என்பது **FriMi** ් ஊடாக NTB ් யில் வாடிக்கையாளர் ஒருவர் மூலம் ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புக் கணக்கு என்பது பொருளாகும். **FriMi** நிதியியல் சேவைகளை வழங்குவதற்காக அத்தகைய கணக்கை ஆரம்பிப்பது முன் தேவைப்பாடொன்றாக இருக்கும்.

   எ. "**FriMi தொடர்பு**" என்பது வாடிக்கையாளரின் **FriMi** கணக்கின் தொடர்பு பட்டியலில் யாருடைய தொடர்பு விபரங்கள் சேமிக்கப்பட்டுள்ளதோ அம் மூன்றாம் தரப்பு (ஆள் அல்லது நிறுவனம்) என்பது பொருளாகும்.

   ஏ. "**FriMi** ් **பற்று அட்டை**" என்பது ஒன்றில் **FriMi** பௌதீக அட்டை அத்துடன்/அல்லது **Fri** மெய்நிகர் பற்று அட்டை என்பது பொருளாகும்.

ஐ. “**FriMi ி பௌதீக பற்று அட்டை**” என்பது **FriMi** சேமிப்புக் கணக்குக்கு இணைக்கப்பட்டுள்ள NTB மூலம் வழங்கப்படும் பற்று அட்டையொன்றின் பௌதீக ரீதியான பதிப்பு என்பது பொருளாகும்.

ஒ. “**FriMi மெய்நிகர் பற்று அட்டை**” என்பது **FriMi** சேமிப்புக் கணக்குக்கு இணைக்கப்பட்டுள்ள NTB ி மூலம் வழங்கப்படும் பற்று அட்டையொன்றின் டிஜிடல் பதிப்பாகும்.

ஓ. **“**NTB **மூலம் இயக்கப்படும் FriMi ி” “FriMi ி”** என்பது வாடிக்கையாளர்களுக்கு **FriMi** சேவைகளை வழங்குவது தொடர்பில் NTB மூலம் அத்துடன் அதன் இணைந்த பங்காளர்கள் மூலம் சொந்தமாக கொள்ளப்பட்ட, நிருவகிக்கப்படுகின்ற தொழில்நுட்பவியல் உருவாக்கம் என்று பொருளாகும்.

ஔ. **“FriMi சேவைகள்”** என்பது **FriMi** ஊடாக வாடிக்கையாளர்களுக்கு NTB மூலம் வழங்கப்படும் **FriMi** நிதியியல் சேவைகள் அத்துடன் **FriMi** நிதியல்லா சேவைகள் என்பது பொருளாகும்.

க. “**FriMi நிதியியல் சேவைகள்**” என்பது நிதியியல் கிடைப்பனவுகளை மற்றும் கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கி **FriMi** ியில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியியல் சேவைகள் என்பது பொருளாகும்.

ங. “**FriMi நிதியல்லா சேவைகள்**” என்பது பின்வருவன உள்ளடங்கலாக அத்துடன் **FriMi** ியில் வாடிக்கையாளர் பயன்படுத்தப்படுகின்ற நிதியல்லா சேவைகள் எனப் பொருள்படுவதுடன் இது மிகக்குறிப்பாக **FriMi** நிதியியல் சேவைகளை தவிர்த்தல் வேண்டும்:

- சந்தைப்படுத்தல் தகவல்களை பார்வையிடுதல்
- ஊக்குவிப்புகள் மற்றும் அறிமுகப்படுத்தல், செய்துகாட்டலை பார்வையிடல்
- NTB ியின்தன்னியக்க டெல்லர் இயந்திரங்கள் மற்றும் கிளை தேடியை பார்வையிடுதல்
- காலத்திற்கு காலம் NTB மூலம் அறிவிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கொடுக்கல்வாங்கல்

ச. **“FriMi வலைத்தளம்**” என்பது www.frimi.lk என்பது பொருளாகும்.

“நிதி பற்றுசீட்டு” என்பது நிதி மாற்றங்கள் மூலமாகவோ அல்லது அடையாளக்குறி (Tokens) வரைவது மூலமாகவோ அல்லது வேடீ சார்பில் வேறு எந்த முறையில் அறிவிக்கப்பட்டாலும், Payment Instruments என்ற கட்டணக்கருவிகளில் பணம் பெறுவது.ட. “**வாழ்க்கை முறைச் சேவைகள்**” என்பது **FriMi** செயலி மீது நேரடிப் பற்றுத் தெரிவு ஊடாக கொள்வனவு செய்வதற்கு அல்லது இணைந்து கொள்வதற்கு ஆக்கப்பட்டுள்ள சேவை வழங்குநர்களின் உற்பத்திகள் அல்லது சேவைகள் என்பது பொருளாகும்.

ண. “**வணிகர்கள்**” என்பது NTB ியுடன் பதிவுசெய்து கொள்வதன் மூலம் அவர்களது வியாபார நோக்கங்களுக்காக **FriMi** ியில் கிடைக்கப்பெறுகின்ற தொழிற்பாடுகளை பயன்படுத்துவதற்கு தெரிவுசெய்கின்ற பொருட்கள் அத்துடன்/அல்லது சேவைகள் வழங்குநர்கள் என்பது பொருளாகும்.

த. “**குறைந்தபட்ச மீதி**” என்பது வாடிக்கையாளரின் **FriMi**ி சேமிப்புக் கணக்கில் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச மீதி (ஏதேனும் இருப்பின்) என்பது பொருளாகும், அவ்வாறு சொல்லப்பட்ட தொகை காலத்திற்கு காலம் NTB மூலம் அறிவிக்கப்படக்கூடியதாகும் என்பதுடன் NTB ியின் தற்றுணிபில் மாற்றத்திற்குட்டதுமாகும்.

ந. “**செல்லிடச் சாதனம்**” என்பது செல்லிட தொலைத் தொடர்பு வலையமைப்புகளுக்கு இணைப்பதற்கு இயலுமையினை கொண்டுள்ள செல்லிட தொலைபேசி, டெப்லட (tablet), பம்லட் (phablet)

அல்லது அத்தகைய வேறு செல்லிட சாதனம் என்பதுடன் காலத்திற்கு காலம் NTB மூலம் அறிவிக்கப்படக்கூடியவாறு எப்போதும் அத்தகைய விபரக் குறிப்பு தேவைப்பாடுகளுக்குட்பட்டு இணையத் தொடர்புகையினை கொண்டது என்பது பொருளாகும்.

ப. “**செல்லிட தொலைபே சி இலக்கம்**” என்பது NTB ியுடன் பதிவுசெய்துள்ள அல்லது NTB ியுடன் தொடர்பூட்டுவதற்கான தொடர்பு இலக்கம் ஒன்றாக பிரிமிக்காக பதிவுசெய்கின்ற போது வாடிக்கையாளர் மூலம் வேறு வகையில் வழங்கப்பட்ட வாடிக்கையாளரின் செல்லிட தொலைபேசி இலக்கம் என்பது பொருளாகும்.

ம. “NTB” என்பது நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி PLC, PQ 118 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பொது வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியும் அத்துடன் 1988ம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுமாகும் என்பதுடன் அதன் அனுமதிக்கப்பட்ட பின்னுறுபவர்களையும் சாட்டுதல்காரர்களையும் இது உள்ளடக்குதல் என்பது பொருளாகும்.

ய. “**கொடுப்பனவுத் தொகை**” என்பது கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல் ஒன்றின் ஏற்புடையவாறு தொடர்புடைய கட்டணங்கள், வேறு அறவீடுகள் மற்றும் வரிகள் என்பவற்றுடன் சேர்த்து இலங்கை ரூபாவில் தொகை (அல்லது) ஏற்புடையவிடத்து வெளிநாட்டு நாணயத் தொகை என்பது பொருளாகும்.

ர. “**கொடுப்பனவுச் சாதனங்கள்**” என்பது கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களை கொண்டுநடாத்தும் பொருட்டு **FriMi** கணக்கு மீது பதிவுசெய்வதற்கு வாடிக்கையாளர் தெரிவுசெய்துள்ள **FriMi** சேமிப்புக் கணக்கு, **FriMi** பற்று அட்டை மற்றும் அத்தகைய வேறு வங்கி கணக்குகள் (NTB அத்துடன்/அல்லது வேறு வங்கி) NTB ஏற்றுக்கொள்ளத்தக்க கடன் அட்டைகள் அத்துடன்/அல்லது பற்று அட்டைகள் என்பது பொருளாகும்.

ல. **“கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள்”** என்பது பின்வரும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வாடிக்கையாளரின் தொடர்புடைய கொடுப்பனவுச் சாதனத்திற்கு கொடுப்பனவு தொகையினை பற்றுவைக்கின்ற, அறவிடுகின்ற வேறு தொகையுடைய கொடுக்கல்வாங்கல்ளை விளைவிக்கின்ற கொடுப்பனவொன்றின் செயல்முறைப்படுத்தல் என்பது பொருளாகும், இதன் மேலதிக விபரங்கள் (தொடர்புடையவிடத்து வரையறைகள் உள்ளடங்கலாக) **FriMi** செயலியில் எடுத்துரைக்கப்பட்டுள்ன.

- வாடிக்கையாளர்களுக்கிடையிலான பணத்தொகைகளின் பரிமாற்றல்
- வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளரின் **FriMi** தொடர்புக்கு பணத்தொகை களை் பரிமாற்றல்
- NTB ியுடன் பதிவுசெய்துள்ள பயன்பாட்டு சேவை வழங்குநர்களுக்கு வாடிக்கையாளர்கள் மூலமான கொடுப்பனவுகள்
- **FriMi** ி கொடுப்பனவுச் சேவைகளை ஏற்றுக்கொள்கின்ற வணிகர்களுக்கு/வணிகரிடத்தில் வாடிக்கையாளர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள்
- NTB ியுடன் பதிவுசெய்துள்ள சேவை வழங்குநர்களுக்கு வாடிக்கையாளர் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள்
- இணையவழிக் கொடுப்பனவுகள்
- அடையாளக்குறியினை உருவாக்கல்
- நிதியங்கள் மீளெடுப்பு
- காலத்திற்கு காலம் NTB மூலம் அறிவிக்கப்படக்கூடியவாறு நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்புக் கணக்கு உற்பத்திகளை ஆரம்பித்தல்
- காலத்திற்கு காலம் NTB மூலம் அறிவிக்கப்படக்கூடியவாறு அத்தகைய வேறு கொடுக்கல்வாங்கல்கள்

ள. ''**அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுகொடுக்கல்வாங்கல்கள்**'' என்பது **FriMi** சேமிப்புக் கணக்குகளுக்குள் வெளிநாட்டு நாணயத்தில் உள்முக பணம் அனுப்பல்கள் அத்துடன் கொடுப்பனவுச் சாதனம் வாயிலாக சர்வதேச கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டு நாணயத்தில் இணையவழி கொடுப்பனவுகள் என்பது பொருளாகும்.ஒவ்வொரு விடயத்திலும் நிறுவன வலைத்தளம், **FriMi** வலைத்தளம் அத்துடன்/அல்லது **FriMi** ில் வேறு சமூக ஊடக வலைத்தளங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டதாகவிருக்கும்.

அஅ. ''**சேவை வழங்குநர்**'' என்பதுFriMi மூலம் வாழ்க்கை முறை சேவைகள் வழங்குவதற்காக பதிவு செய்து, தங்களின் வணிக நோக்கங்களுக்காக குசஆைமெ இல் உள்ள செயல்பாடுகளை பயன்படுத்த தேர்ந்தெடுக்கும் சரக்கு அல்லது சேவைகள் வழங்குநர்களைக்குறிக்கிறது.

ஆஆ. ''**பதிவுத் தகவல்கள்**'' என்பது 4 ஆம் வாசகத்தில் எடுத்துரைக்கபட்டவாறு **FriMi** ி கணக்கொன்றின் பதிவுசெய்தலுக்கு ஏற்புடைய தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் நோக்கத்திற்காக NTB ிக்கு வாடிக்கையாளர் மூலம் வழங்கப்படும் தகவல்கள் மற்றும் துணையளித்தல் சான்று என்பது பொருளாகும்.

இஇ. **''நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**'' என்பது காலத்திற்கு காலம் NTB மூலம் குறைநிரப்பு, பதிலீடுசெய்ய. திருத்த அல்லது மாற்றீடு செய்யக்கூடியவாறான இந்நியதிகளும் நிபந்தனைகளும் என்பது பொருளாகும்.

ஈஈ. ''**அடையாளக்குறி**'' என்பது NTB பண மீளெடுப்பு இயந்திரம் ஒன்றிலிருந்து காசை மீளெடுப்பதற்கு பயன்படுத்த அல்லது **FriMi** செயலி அல்லது NTB செல்லிட வங்கிச் சேவைச் செயலி ஊடாக மீட்கப்படக்கூடிய அன்பளிப்பு வவுச்சரின் இலத்திரனியல் ரீதியான சம ஆவணம் என்பது பொருளாகும்.

உஉ. ''**கொடுக்கல்வாங்கல் வரையறை''** என்பது ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களுக்கும் செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச பணப் பெறுமதி என்பது பொருளாகும். சொல்லப்பட்ட தொகை காலத்திற்கு காலம் NTB மூலம் அறிவிக்கப்படக்கூடியதாகும் என்பதுடன் NTB ியின் தற்றுணிபில் மாற்றத்திற்குட்டதுமாகும்.

ஊஊ. **''பயனர் அடையாளங்கள்''** என்பது வாடிக்கையாளரின் **FriMi** கணக்கிற்கு நுழையும் அத்துடன்/அல்லது **FriMi** ி நிதியியல் சேவைகளை பயன்படுத்தும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் ஒருவர் மூலம் பதிவுசெய்யப்பட்ட பயனர் அடையாளங்கள், தனிப்பட்ட இலக்கங்கள், கடவுச்சொற்கள் அத்துடன் உயிரியல் தகவல்கள் தரவு என்பது பொருளாகும்.

2. **NTB மூலம் இயக்கப்படும் FriMi**

நியதிகளும் நிபந்தனைகளும், தொடர்பின் மூலம் இதில் கூட்டிணைக்கப்பட்டுள்ள **FriMi** ி வலைத்தளம் மற்றும் **FriMi** ி செயலி என்பவற்றில் எடுத்தரைக்கப்பட்ட அறிவித்தல்களுடன், விபரக்குறிப்புகளுடன் அத்துடன் வரையறைகளுடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளருக்கு **NTB** ி மூலம் **FriMi** சேவைளை வழங்குவதையும் வாடிக்கையாளர் மூலமான அதன் பயன்பாட்டையும் நிருவகிக்கின்றது. வாடிக்கையாளருக்கு **FriMi** ி சேவைகளை வழங்குவது தொடர்பிலான மேலதிக விபரங்களுக்கு **FriMi** வலைத்தளத்தை அணுகுவதற்கும் வாடிக்கையாளருக்கு மேலதிக தகவல்கள் வேண்டப்படுகின்ற சந்தர்ப்பத்தில் **FriMi** ி உதவியினை தொடர்புகொள்வதற்கும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார். குறிப்பாக நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமான எவையேனும் திருத்தங்கள் குறைநிரப்பல்கள் அத்தகைய வலைத்தளத்தின் மீது வெளியிடப்படுதல் என்பதுடன் இலத்திரனியல் செய்தி ஒன்றின் வாயிலாக வாடிக்கையாளருக்கு அனுப்பப்படும்.

3. **FriMi ி நிதியியல் சேவைகளை பயன்படுத்தல்**

**FriMi** ி நிதியியல் சேவைகளை பயன்படுத்தும் பொருட்டு வாடிக்கையாளர், **FriMi** கணக்கில் கொடுப்பனவுச் சாதனம் ஒன்றின் பதிவுசெய்கின்ற பக்கங்களின் மீது வேண்டப்பட்ட அனைத்து தகவல் கூறுகளையும் வாடிக்கையாளர் பூர்த்திசெய்ய வேண்டும்.

கொடுப்பனவுச் சாதனங்கள், வழங்கும் நிதியியல் நி றுவனங்களுடன் சிறந்த நிலையில் காணப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதற்கு வாடிக்கையாளர் **NTB** ிக்கு அதிகாரமளிக்கின்றார்.

4. **FriMi ி சேவைகளுக்கு பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகள்**

அ. **FriMi** சேவைகளுக்கு பதிவுசெய்யும் நோக்கங்களுக்காக பின்வரும் தேவைப்பாடுகளை வாடிக்கையாளரொருவர் நிறைவுசெய்ய வேண்டும்;

i. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்;

ii. இலங்கையில் வதிபவராக இருத்தல் அல்லது வதியாத ஒருவராயின் **NTB** ஏற்றுக்கொள்ளத்தக்க செல்லுபடியான வேலை வீசாவினை கொண்டிருத்தல்;

iii. **FriMi** செயலியினை பதிவிறக்கம் செய்து, **FriMi** சேவைகளை பயன்படுத்துவதற்கான பொருத்தமான மென்பொருளுடன் கூடிய செல்லிட சாதனமொன்றை உடைமையாக கொண்டிருத்தல்;

iv. வாடிக்கையாளரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட செல்லிட தொலைபேசி இலக்கம் ஒன்றினை வழங்குதல் (அல்லது) வாடிக்கையாளர் தவிர வேறொருவரது பெயரில் அது காணப்படுகின்றவிடத்து அத்தகைய செல்லிட தொலைபேசியின் இலக்கத்தை பயன்படுத்துவதற்கான அனுமதி; அத்துடன்

v. **NTB** ியின் பணம் துய்தாக்கலுக்கு எதிரான மற்றும் “உங்களது வாடிக்கையாளர்களை தெரிந்துகொள்ளுங்கள்” தேவைப்பாடுகள் அனைத்தையும் நிறைவுசெய்தல்;

ஆ. மேற்சொல்லப்பட்ட பதிவுத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு துணையளிக்கும் பொருட்டு வாடிக்கையாளர் போதிய பதிவுத் தகவல்களை **NTB** க்கு வழங்குதல் வேண்டும். பதிவுத் தகவல்களானவை காலத்திற்கு காலம் **NTB** யினால் குறித்துரைக்கப்பட்டுள்ள விதத்தில் வழங்கப்படல் வேண்டும், இவை **FriMi** செயலி வாயிலாக பதிவுத் தகவல்களை டிஜிடல்ரீதியாக சமர்ப்பிப்பதை உள்ளடக்கும். தேவையேற்படுமாயின் பதிவுத்தகவல்களை மூன் றாம் தரப்பினர்களைக் கொண்டு உறுதிப்படுத்துவதற்கு **NTB** உரிமையினை கொண்டிருக்கும்.

இ. மேற்சொல்லப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவுசெய்தல் எது எவ்வாறிருப்பினும் வாடிக்கையாளர் ஒருவராக எவரேனும் ஆளின் பதிவினை அனுமதிப்பதில் **NTB** ஏக தற்றுணிபினை கொண்டிருத்தல் வேண்டும். பதிவு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டு, இதனூடாக **FriMi** ி சேவைகளைப் பயன்படுத்தத் தொடங்குவதற்கு வாடிக்கையாளர் இயலச்செய்யப்பட்டமையை **FriMi** செயலி வாயிலாக, வாடிக்கையாரின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு மின்னஞ்சல் ஊடாக அத்துடன்/அல்லது செல்லிடத் தொலைபெசி இலக்கத்துக்கு குறுஞ் செய்தி மூலம் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும்.

ஈ. **NTB** யின் தொடர்ச்சியான பணம் துய்தாக்கலுக்கு எதிரான மற்றும் “உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளங்கள்(KYC) ” தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளரொருவரின் **FriMi** கணக்கின் பதிவுசெய்தல் நிறைவுபெற்ற பின்னரும் கூட காலத்திற்கு காலம் மேலதிக ஆவணப்படுத்தலையும் துணையளிக்கின்ற தகவல்களையும் கோருவதற்கு என்ரிபி உரிமையினை கொண்டிருக்கும். **NTB** , வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் அதன் தற்றுணிபில்

**NTB**யிடமிருந்து அதற்கான கோரிக்கையின் பின்னர் திருப்திகரமான ஆவணப்படுத்தலையும் துணையளிக்கும் தகவல்களையும் வழங்குவதற்கு தவறுகின்ற சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளரின் **FriMi** கணக்கை முடக்கலாம் அல்லது மூடலாம்.

உ. அத்தகைய வாடிக்கையாளருக்கு மாத்திரம் அத்துடன் வேறு ஆளுக்கன்றி தொடர்புடைய செம்மையான மற்றும் உண்மையான பதிவுத் தகவல்களை வழங்குவது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். அத்தகைய பதிவுத் தகவல்களை இற்றைவரை பேணுவதற்கும் அல்லது மாற்றங்கள் நிகழ்கையில் **NTB** ிக்கு தெரியப்படுத்துவதும் வாடிக்கையாளரின் பொறுப்பாகும். வாடிக்கையாளரொருவரின் இலங்கை வதிவிட அந்தஸ்தில் மாற்றம் **FriMi** ி நிதியியல் சேவைகளை உபயோகிப்பதற்கு வாடிக்கையாளரை தகைமை இழக்கச் செய்யலாம்.

ஊ. வாடிக்கையாளர் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பதிவுத் தகவ்களில் உள்ள ஏதேனும் பிழைகளை, தவறுகளை, செம்மையின்மைகளை மாற்றுவதற்கு **NTB** உரிமையினை கொண்டிருக்கும். அத்தகைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் **FriMi** செயலி ஊடாக **NTB** மூலம் வழங்கப்படும். அத்தகைய மாற்றங்களுக்கு வலுவளிப்பதற்கு வாடிக்கையாளரிடமிருந்து மேலதிக சம்மதம் எதுவும் வேண்டப்படாது.

## 5. FriMi நிதியியல் சேவைகள்

அ. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்கள் தவிர, **FriMi**ி நிதியியல் சேவைகள், இலங்கை ரூபாவில் உள்நாட்டு கொடுக்கல்வாங்கல்களை நிறைவுசெய்வதற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆ. **FriMi** ி நிதியியல் சேவைகள் சட்டபூர்வமான அத்துடன் சட்டத்தினால் அனுமதியளிக்கப்பட்ட நோக்கங்களுக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை கொண்டுநடாத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்.

இ. வாடிக்கையாளரின் கொடுப்பனவுச் சாதனம் அதிகாரமளிக்கப்பட்டவுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கலானது நிறைவுசெய்யப்பட்டதும் நிறைவேற்றப்பட்டதுமாக கருதப்படும். கொடுப்பனவுச் சாதனம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள் வாடிக்கையாளர் மற்றும் தொடர்புடைய நிதியியல் நிறுவனம் அத்துடன்/அல்லது வழங்குநர் (பற்று அல்லது கடன் அட்டை விடயத்தில்) இடையிலான நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டவையாகும்.

ஈ. கொடுப்பனவுச் சாதனம் ஒன்றை வாடிக்கையாளர் உபயோகிப்பதன் விளைவாக கொடுப்பனவு சாதன நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் விதிக்கப்படக்கூடிய எவையேனும் கட்டணங்களுக்கும் அறவீடுகளுக்கும் வாடிக்கையாளர் பொறுப்புடையவராவார்.

உ. **FriMi** நிதியியல் சேவைகளின் இடைத்தடங்கலற்ற பயன்பாட்டினை கொண்டிருக்கும் பொருட்டு கொடுப்பனவு சாதனத்தை சரியான நேரத்தில் இற்றைப்படுத்தி மீளாய்வு செய்வதற்கு வாடிக்கையாளர் ஏக பொறுப்புடையவராவார்.

ஊ. **FriMi** ஊடாக செயன்முறைப்படுத்தும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் வாடிக்கையாளருக்கு மீளளிக்கமுடியாதவையாவதுடன் **FriMi** ஊடாக வாடிக்கையாளர் மூலம் மீளத் திருப்ப முடியாதவையுமாகும். கீழே 8 ஆம் வாசகத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு தொடர்புடைய கொடுப்பனவு சாதனங்களை ஆளுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வாடிக்கையாளர் மேலதிக மீளளிப்பு, திரும்பல் அல்லது அறவீட்டை மீளளித்தல் உரிமைகளை கொண்டிருக்கலாம்.

எ. வாடிக்கையாளரின் **FriMi** ி கணக்கு மற்றும் அதற்கு இணைக்கப்பட்டுள்ள கொடுப்பனவு சாதனம் என்பவற்றை பயன்படுத்தி இடம்பெறுகின்ற கொடுக்கல்வாங்கல்களை கண்காணிப்பதற்கும் மேற்பார்வைசெய்வதற்கும் **NTB** ி உரிமையினை கொண்டுள்ளது. **FriMi** கணக்கு அத்துடன்/ அல்லது

அதற்கு இணைக்கப்பட்ட கொடுப்பன வுச் சாதனங்கள் ஊடாக சந்தேகத்திற்கிடமான அல்லது உத்தேசிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெறுகின்றன என **NTB** கருதுகின்ற சந்தர்ப்பத்தில், வாடிக்கையாளருக்கு அறிவித்தலை வழங்காது **FriMi** ີ கணக்கு கிடைக்கப்பெறுவதனை இடைநிறுத்துவதற்கான உரிமை உள்ளடங்கலாக அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை திருப்புவதற்கு இடைநிறுத்துவதற்கு **NTB** உரிமையினை கொண்டுள்ளது. அத்தகைய சூழ்நிலைகளில் **FriMi** ີ கணக்கிற்குரான பெறுவழி கட்டுப்படுத்துபடகின்றமைக்கு **NTB** பொறுப்புடையதாகவிராது.

ஏ. விடயத்திற்கு ஏற்றவாறு 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு அத்துடன் ஏதேனும் வேறு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு மற்றும் வேறு ஒருங்குமுறைப்படுத்துநர்களுக்கு சந்தேகத்திற்கிடமாான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு வங்கி உரிமையினை கொண்டுள்ளது.

நிதியியல் உளவறிதல் பிரிவு/அதிகாரி/ஒருங்குமுறைப்படுத் துநர் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளக்கூடாதென **NTB** யினை அறிவுறுத்துகின்ற சந்தர்ப்பத்தில் **NTB** , அவசியமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு அத்துடன் ஏதேனும் வேறு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு மற்றும் வேறு ஒருங்குமுறைப்படுத்துநரை அனுமதிக்கும் பொருட்டு கொடுக்கல்வாங்கல்களை இடைநிறுத்தும்.

மேற்குறித்தவை தொடர்பில் **NTB** ີ மூலம் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை பற்றி அறிவிக்கப்படுவதற்கு வாடிக்கையாளர் பொறுப்புடையவராக மாட்டார்என்பதுடன் **NTB** ີ மூலம் எடுக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கை தொடர்பில் வாடிக்கையாளருக்கு **NTB** பொறுப்புக்கூறாது அல்லது பொறுப்புடையதாகாது.

ஐ. ஒழுங்குவிதியினால் குறித்துரைக்கப்பட்ட தொகையினை விஞ்சுகின்ற ஏதேனும் விதத்தில் (உள்முக மற்றும் வெளிமுக பணம் அனுப்பல்கள், இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு பரிமாற்றல்கள், அதேநேர மொத்த தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்கள், கடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள், பற்று அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயம் அத்துடன் வேறு விசேட கணக்குகள் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு பணக் கொடுக்கல்வாங்கல்களையும் மற்றும் இலத்திரனியல் நிதி மாற்றல்களையும் நிதியியல் உளவறிதல் பிரிவு மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுவதற்கு **NTB** ີ வேண்டப்பட்டுள்ளது.

மேற்குறித்தவை தொடர்பில் **NTB** மூலம் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை பற்றி அறிவிக்கப்படுவதற்கு வாடிக்கையாளர் பொறுப்புடையவராக மாட்டார் என்பதுடன் என்ரிபி மூலம் எடுக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கை தொடர்பில் வாடிக்கையாளருக்கு **NTB** பொறுப்புக்கூறாது அல்லது பொறுப்புடையதாகாது.

ஒ. காலத்திற்க காலம் **NTB** மூலம் அறிவிக்கப்படுகின்றவாறான அத்தகைய வீதங்களிலும் கொடுப்பனவுசெய்யத்தக்க அத்தகைய விதத்திலும் **FriMi** வாடிக்கையாளரின் சேமிப்புக் கணக்கில் வரவில் காணப்படுகின்ற நிதியங்கள் மீது வட்டிக்கு வாடிக்கையாளர் உரித்துடையவராக இருப்பார். **NTB** ີயின் தற்றுணிபில், காலத்திற்கு காலம் அறிவிக்கப்படக்கூடியவாறு **FriMi** ີ சேமிப்புக் கணக்கு மீது மிகை கொடுப்பனவு வட்டி மற்றும் வேறு வெகுமதிகளுக்கும் வாடிக்கையாளர் மேலதிகமாக உரித்துடையவராகவிருக்கலாம்.

ஓ. அவரது சேமிப்புக் கணக்கில் குறைந்தபட்ச மீதியினை (ஏதேனும்) பேணுவதற்கு இருப்பின் வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

ஔ. **FriMi** ி நிதியியல் சேவைகள், தனிப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறைவுசெய்யும் நோக்கங்களுக்காக மாத்திரம் வாடிக்கையாளர் மூலம் பயன்படுத்தப்படலாம் என்பதுடன் வாடிக்கயைாளரின் **FriMi** கணக்கு ஊடாக வர்த்தகரீதியான நோக்கு அல்லது இணைந்த கொடுக்கல்வாங்கல் எதுவும் மெற்கொள்ளப்படலாகாது.

க. வாடிகையாளர் **NTB** மூலம் விதிக்கப்படக்கூடியவாறான ஏற்புடைய கொடுக்கல்வாங்கல்கள் வரையறைக்கு உட்பட்டிருப்பார் என்பதுடன் அதனுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். அவருக்கு உரித்தான கொடுக்கல்வாங்கல்கள் வரையறையினை விதிக்கும் தெரிவினை வாடிக்கையாளர் கொண்டுள்ளார் ஆயின், அத்தகைய வரையறைகள் ஏற்புடைய கொடுக்கல்வாங்கல்கள் வரையறைக்கு உட்பட்டதாவிருக்கும்.

ங செல்லிட சாதனத்திற்கு அனுப்பப்படுகின்ற உறுதிப்படுத்தல் செயலியொன்றின் வாயிலாக கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் பொருட்டு கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடங்குகின்ற நேரத்தில் செல்லிட சாதனத்தை தனது உடமையில் வைத்திருப்பதற்கு வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

**6. கொடுப்பனவுச் சாதனங்கள்**

அ. இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை கையொப்பமிடுவதன் மூலம் வாடிக்கையாளரின் பெயரில் **FriMi** ி சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கு வாடிக்கையாளர் **NTB** ியினை கோருகின்றார்.

ஆ. **FriMi**ி வலைத்தளத்தில் அத்துடன்/அல்லது **FriMi** யின் வேறு சமூக ஊடக தளங்களில் எடுத்துரைககப்பட்டுள்ளவாறு **NTB** ியின் விபரக்குறிப்புகளுக்கமைவாக வாடிக்கையாளர் வேறு வங்கிகளிடம்/நிதியியல் நிறுவனங்களிடமிருந்தான கொடுப்பனவு சாதனங்களை வாடிக்கையாளரின் **FriMi** ி கணக்கிற்கு இணைக்கலாம். கொடுப்பனவு சாதனமானது வாடிக்கையாளரின் **FriMi** ி கணக்கிற்கு வெற்றிகரமாக இணைக்கப்பட்டவுடன் வாடிக்கையாளருக்கு **FriMi** சேவைகளை வழங்குவதற்கு வேண்டப்படக்கூடியவாறு தொடர்புடைய கணக்கு/அட்டை இலக்கங்களை **NTB** சேமிக்கும்.கொடுப்பனச் சாதனங்கள் தொடர்பில் வாடிக்கையாளருக்கும் அத்தகைய வேறு வங்கிக்கு/நிதியியல் நிறுவனத்திற்கிடையிலான ஏதேனும் உடன்படிக்கைக்கு வங்கி தரப்பினர் ஒருவரல்ல என்றும் கொடுகடனை வழங்குவதில் அல்லது கொடுகடனுக்கான த கைமையினை நிர்ணயிப்பதில் ஈடுபடுவதில்லை என்றும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். அத்தகைய கொடுப்பனவு சாதனங்களில் எதுவும் சிறந்த நிலையில் காணப்படுகின்றது என்பதை அல்லது **FriMi**ி ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை தொடர்புடைய வங்கி/நிதியியல் நிறுவனம் அதிகாரமளிக்கும் அல்லது அனுமதியளிக்கும் என்பதற்கு ஏதேனும் பிரதிநிதித்துவத்தை **NTB** மேற்கொள்வதில்லை அல்லது உறுதிப்படுத்துவதில்லை.

இ. வழங்கப்பட்ட கொடுப்பனவு சாதனத்தைக் கொண்டு **FriMi** சேவைகளை வாடிக்கையாளர் பயன்படுத்தலானது இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மூலமும் அதேபோன்று தொடர்புடைய கொடுப்பனவுச் சாதனம் ஆரம்பிக்கப்பட்ட/வழங்கப்பட்ட வங்கி/நிதியியல் நிறுவனங்களிடமிருந்தான ஏற்புடைய நியதிகள்/அந்தரங்கக் கொள்கை மூலமும் நிருவகிக்கப்படுகின்றது.அத்தகைய நியதிகளை அல்லது அந்தரங்க கொள்கைகளை இவ் நியதிகள் நிபந்தனைகள் எதுவும் திருத்தியமைக்காது. நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அத்துடன் வங்கியின்/நிதியியல் நிறுவனத்தின் நியதிகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் **FriMi** தொடர்பில் வாடிக்கையாளருக்கும் **NTB** ிக்கும் இடையிலான உறவினைஇவ் நியதிகளும் நிபந்தனைகளும் நிருவகிக்கும் என்பதுடன் வாடிக்கையாளருக்கும் அத்தகைய வங்கி/ நிதியியல் நிறுவனத்திற்கும் இடையிலான உறவினை வங்கி/நிதியியல் நிறுவனத்தின் நியதிகள் நிருவகிக்கும்.

ஈ. வாடிக்கையாளரின் **FriMi** கணக்கிற்கு இணைக்கப்படவுள்ள கொடுப்பனவு சாதனங்களை பெயர்குறிப்பதன் மூலம் வாடிக்கையாளர், **FriMi** ີ நிதியியல் சேவைகளை பயன்படுத்தும் நோக்கங்களுக்காக கொடுப்பனவுச் சாதனங்களை பற்றுவைப்பதற்கு அல்லது வரவுவைப்பதற்கு சம்மதமளித்து **NTB** க்கு அதிகாரமளிக்கின்றார் என வாடிக்கையாளர் இணங்குகின்றார். கொடுப்பனச் சாதனங்கள் தொடர்பிலான கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் **FriMi** சேவைகளின் வாடிக்கையாளரின் பயன்பாட்டுடன் ஒத்திசைவாக இருக்கும் என்பதனை வாடிக்கையாளர் உறுதிசெய்வாரென **NTB** க்கு வாடிக்கையாளர் வெளிப்படுத்துகின்றார், உத்தரவாதமளிகின்றார் மற்றும் பொறுப்பேற்கின்றார்.

உ. கொடுப்பனவு சாதனங்களை வாடிக்கையாளரின் **FriMi** கணக்கிற்கு இணைப்பதற்கு தெரிவுசெய்வதன் மூலம் வாடிக்கையாளர் அத்தகைய கொடுப்பனவு சாதனங்களின் விபரங்களையும் தொடர்புடைய தகவல்களையும் வாடிக்கையளர்களுக்கு வழங்கல் செய்யப்படவிருக்கின்ற பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அம்மூன்றாந் தரப்பினர் அதற்கு அறவிடுவதற்கு தொடர்புடைய அத்துடன்/அல்லது குறித்துரைக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரொருவருக்கு ஊடுகடத்துவதற்கு ஏற்றுக்கொண்டு, சம்மதமளித்து அத்துடன் என்ரிபிக்கு அதிகாரமளிக்கின்றார். அத்தகைய விடயங்களில் அம்மூன்றாம் தரப்பினருக்கு அத்தகைய விபரஙகள் ஊடுகடத்திய பின்னர் அம்மூன்றாம் தரப்பினருடன் கொடுக்கல்வாங்கல்களில் மேலதிக ஈடுபாடு எதையும NTB கொண்டிராது. அத்தகைய மூன்றாம் தரப்பு கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றுகின்ற எவையேனும் பிரச்சினைகளுக்கு **NTB** பொறுப்புடையதல்ல. பிணக்குகள் விடயத்தில் வாடிக்கையாளர், அத்தகைய கொடுப்பனவுச் சாதனம் திறக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள மூன்றாம் தரப்பினரை அல்லது நிதியியல் நிறுவனத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

ஊ. **FriMi**ີ கணக்கிலுள்ள கொடுப்பனச் சாதனங்கள் தொடர்பில் செம்மையான தகவல்களை பேணுவதற்கு வாடிக்கையாளர் பொறுப்படையவராவார் (காலாவதித் திகதிகள், இற்றைப்படுத்தப்பட்ட அட்டை இலக்கங்கள் போன்ற). வாடிக்கையாளரின் **FriMi** கணக்குடன் கொடுப்பனவு சாதனங்களை பதிவுசெய்வதற்கு வாடிக்கையாளர் அனைத்து உரிமைகளையும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளார் என வாடிக்கையாளர் **NTB** ີக்கு உறுதிப்படுத்தி உத்தவாதமளிக்கின்றார்.

எ. **NTB** யுடன் பேணப்படுகின்ற இணைந்த வங்கி கணக்கொன்று மீது (கொடுப்பனவுச் சாதனம் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ள) வாடிக்கையாளரொருவர் அறிவுறுத்தல்களை வழங்குவாராயின், அத்தகைய அறிவுறுத்தல்கள், **FriMi** ີ செயலி ஊடாக அத்தகைய கணக்கு அதிகாரமளித்தலுக்கான வேண்டப்படுலுக்கான அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரிகள் வேண்டினால் மாத்திரம் செயன்முறைப்படுத்தப்படும். அதற்கமைய, அத்தகைய சம்மதம் வழங்கப்பட்டவுடன் ஒவ்வொரு இணைந்த கணக்கு உடமையாளரும் அதன் விளைவாக செயலாற்றப்படும் கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல் மூலம் இணைத்தும் ஒருமித்தும் பிணிக்கப்பட்டிருப்பர்.

## 7. FriMi பற்று அட்டை

அ. வாடிக்கையாளர், பற்று அட்டையொன்றுக்கு கோருவாராயின், **FriMi** ີ செயலி ஊடாக **FriMi** பௌதீக பற்று அட்டை ஒன்றுக்கு அல்லது **FriMi** ີ மெய்நிகர் பற்று அட்டையொன்றுக்கு வாடிக்கையாளர் கோரவேண்டும். **FriMi** ີ பௌதீக பற்று அட்டை அல்லது **FriMi** மெய்நிகர் பற்று அட்டை **NTB** யின் ஏக தற்றுணிபில் வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

ஒவ்வொரு **FriMi** ີ பற்று அட்டையும், கொடுக்கல்வாங்கல்களுக்காக வாடிக்கையாளர் மூலம் பயன்படுத்தப்படவுள்ள வாடிக்கையாளரின் **FriMi** ີ சேமிப்புக் கணக்கிற்கு இணைக்கப்படும் (இவ்நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு). **FriMi** சேமிப்புக் கணக்கில் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பற்று வைக்கப்படும்.

ஆ. **FriMi** ີ பௌதீக பற்று அட்டையானது “நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி மாஸ்டர் காட் பற்று அட்டை உடமையாளர் உடன்படிக்கை” இன் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு மாத்திரம்

பயன்படுத்தபட்டலாம். ''நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி மாஸ்டர் காட் பற்று அட்டை உடமையாளர் உடன்படிக்கை'' இன் நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதற்கும் அத்துடன் அவற்றின் மூலம் கட்டுப்படுவதற்கும் வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

இ. **FriMi** பௌதீக பற்று அட்டையினை பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் ''நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கி மாஸ்டர் காட் பற்று அட்டை உடமையாளர் உடன்படிக்கை'' இன் நியதிகளும் நிபந்தனைகளும் அதனுடன் தொடர்புடைய விபரங்களுடன் சேர்த்து வாடிக்கையாளருக்கு விளக்கப்பட்டுள்ளதென்றும் அத்தயை நியதிகளையும் நிபந்தனைகளையும் அத்தகைய விபரங்களையும் வாடிக்கையாளர் வாசித்து புரிந்து கொண்டாரென்றும் அவற்றின் மூலம் பிணிக்கப்பட்டிருப்பதற்கு இணங்கி சம்மதிக்கின்றாரென்றும் உறுதிப்படுத்தகின்றார்.

ஈ. இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் கையொப்பமிடுவதன் மூலம் வாடிக்கையாளர்:

(i) வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்கல்வாங்கல்களுக்காக **FriMi** பற்று அட்டையைப் பயன்படுத்தகூடியதாக இருப்பது எச்சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்றதோ அதற்குட்பட்டு இலத்திரனியில் நிதி பரிமாற்றல் அட்டைகள் மீதான 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் (''சட்டம்'') கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் பற்றி வாடிக்கையாளர் அறிவாரென உறுதிப்படுத்தகின்றார்:

(ii) சட்டத்தின் நோக்கங்களுக்காக **NTB** வேண்டக்கூடியவாறு **FriMi** பற்று அட்டை மீது வாடிக்கையாளர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்கள் மீதான எவையேனும் தகவல்களை வழங்குவதற்கு உடன்படுகின்றார்;

(iii) **FriMi** பற்று அட்டை மீது அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றதென சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமிடத்து **FriMi** அட்டை மீது வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கப் பெறுவதை இடைநிறுத்துவதற்கு **NTB** வேண்டப்பட்டுள்ளதென்றும் விடயத்தினை வெளிநாட்டுச் செலாவணி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிக்கையிடுமென்றும் வாடிக்கையாளர் அறிந்துள்ளாரென உறுதிப்படுத்துகின்றார்:

(iv) வாடிக்கயாளர் புலம்பெயர்வாராயின் அல்லது வெளிநாட்டுத் தொழிலுக்காக இலங்கையை விட்டுச் செல்வாராயின் ஏற்புடையவாறு, **FriMi** பௌதீக பற்று அட்டையை **NTB** யிடம் கையளிப்பதற்கும் வதிவிட அந்தஸ்த்தில் ஏதேனும் மாற்றம் பற்றி **NTB** ிக்கு தெரியப்படுத்தவதற்கும் பொறுப்பெற்கின்றார்; அத்துடன்

(v) பின்வருவனவற் றுக்கு **FriMi** பற்று அட்டையினை பயன்படுத்துவதில்லையென மேலும் பொறுப்பேற்கின்றார்:

1. வெளிநாட்டுச் செலாவணியில் வணிகம் செய்தல் (வெளிநாட்டுச் செலாவணி வணிகம்);
2. ஒருங்குமுறைப்படுத்தல் ரீதியாக தடைசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான கொடுப்பனவுகள்;
3. இலங்கைக்கு வெளியே பந்தயம், பணங்கட்டும் விளையாட்டு மற்றும் சூதாட்டச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள்;
4. 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் அத்துடன் அதற்கான ஏதேனும் திருத்தங்களின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் உட்பட்டு வணிக நோக்கங்களுக்காக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவுகள்
5. காலத்துக்கு காலம் ஒருங்குமுறைப்படுத்துனர் மற்றும் **NTB** மூலம் விதிக்கப்படும் ஏதேனும் வேறு கட்டுப்பாடுகள்.

8. அடையாளக் குறியீடுகள் மற்றும் கிப்ட் வவுச்சர்கள்

I. **அடையாளக் குறியீடுகள்**

அ. **FriMi** வலைத்தளத்தில் அத்துடன் அல்லது **FriMi**யின் வேறு சமூக வலைத்தளங்களில் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் வாடிக்கையாளரின் ஏதேனும் தகமையுடைய கொடுப்பனவு சாதனத்தின் ஊடாக எவரேனும் ஆளுக்கு நிதியங்களை அனுப்பும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளரொருவர் அடையாளக் குறியீடொன்றினை உருவாக்கலாம்.

ஆ. அடையாளக் குறியீடுகள், வழங்கப்பட்டவுடன் பெறுபவர் அதனை மீட்பதற்கு/பயன்படுத்துவதற்கு முன்னர் மாத்திரமே இரத்துச் செய்யப்படக்கூடியன. எனினும், அடையாளக் குறியீடானது அது காலாவதி அடைவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லையாயின் அடையாளக் குறியீட்டின் நிதியங்கள் அடையாளக் குறியீட்டின் மீது வாடிக்கையாளரின் தொடர்புடைய சாதனத்திற்கு திருப்பியனுப்பபடும்.

இ. வாடிக்கையாளரொருவர் பிரிமி கணக்கின் ஊடாக வாடிக்கையாளர் அல்லாத ஆளொருவருக்கு நிதியங்களை அனுப்புவாராயின், நிதியங்கள் தன்னியக்கமாக அடையாளக் குறியொன்றாக மாற்றமடையும்.

ஈ. அடையாளக் குறியீடொன்றுக்கான காலாவதிக் காலம் **NTB** யினால் அதன் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படும்.

உ. அடையாளக் குறியீட்டினை உருவாக்குவதற்கு **FriMi** ிக்கு சரியான தகவல்கள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்வதற்கு வாடிக்கையாளர் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

## II. அன்பளிப்பு வவுச்சர்கள்

அ. வாடிக்கையாளர் ஒருவர், **FriMi** ி செயலியில் தொடர்படைய தெரிவினை தெரிவுசெய்வதன் மூலம் **FriMi** செயலி ஊடாக வேறொரு வாடிக்கையாளருககு அல்லது வாடிக்கையாளர் அல்லாத ஆளொருவருக்கு அன்பளிப்பு வவுச்சர் ஒன்றினை வழங்கலாம்.

ஆ. வாடிக்கையாளரின் கொடுப்பனவுச் சாதனத்தை பற்றுவைப்பதன் மூலம் அன்பளிப்பு வவுச்சர் உருவாக்கப்பட்டவுடன், அன்பளிப்பு வவுச்சாரனது இரத்துச் செய்யப்பட அல்லது திருத்தியமைக்கப்பட முடியாது.

இ. **NTB** மூலம் வழங்கப்பட்ட அன்பளிப்பு வவுச்சர் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட இணைப்பின் ஊடாக தொடர்புடைய வணிகரின் வலைத்தளத்திற்கு பிரவேசிப்பதன் வாயிலாக அல்லது தொடர்புடைய வணிகரின் விற்பனை நிலையத்தில் அன்பளிப்பு வவுச்சரை மீட்கலாம்.

ஈ. வணிகர் மூலம் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் தரத்திற்கு **NTB** எவ்விதத்திலும் பொறுப்படையதாகவிராது.

## 9. கட்டணங்கள்

அ. நிறுவன வலைத்தளத்தில் அத்துடன்/அல்லது ், **FriMi** வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட **NTB** ியின் கட்டண கையேட்டில் உள்ளடக்கப்பட்டவாறு ், **FriMi** ியின் பயன்பாடு தொடர்பில் கட்டணங்களை மற்றும் அறவீடுகளை (ஏதும் இருப்பின்) (முடிவுறுத்தல் மீதான எவையேனும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் உள்ளடங்கலாக) (“கட்டணங்கள்” என கூட்டாக குறிப்பீடு செய்யப்படும்) வாடிக்கையாளர் ஏற்க வேண்டும். காலத்திற்கு காலம் கட்டணங்களை திருத்துவதற்கு **NTB** உரிமையினை கொண்டிருக்கும். சொல்லப்பட்ட நிறுவன வலைத்தளத்தில் அத்துடன்/அல்லது ், **FriMi** ி வலைத்தளத்தில் வெளியிடப்படும்.

ஆ. **FriMi** ி சேவைகளை வாடிக்கையாளர் பயன்படுத்துவதன் விளைவாக கொடுப்பனவு செய்யக்கூடிய அனைத்து வரிகள், முத்திரைத் தீர்வை அத்துடன்/அல்லது வேறு அறவீடுகளை

("அறவீடுகள்" என கூட்டாக குறிப்பீடு செய்யப்படும்) அனைத்தையும் வாடிக்கையாளர் **NTB** ிக்கு செலுத்துதல் அல்லது மீள்நிரப்புதல் செய்தல் வேண்டும்.

இ. **FriMi** சேவைகளை பயன்படுத்துவது தொடர்பில் வாடிக்கையாளர் மூலம் கொடுப்பனவு செய்யத்தக்க கட்டணங்களுக்கு அல்லது அறவீடுகளுக்கு ("கட்டணங்கள்" என கூட்டாக குறிப்பீடு செய்யப்படும்) **FriMi** ி சேமிப்புக் கணக்கில் ்/அல்லது வாடிக்கையாளர் வேடீ-யுடன் வைத்திருக்கும் பிற வங்கி கணக்குகள்பற்றுவைப்பதற்கு சம்மதமளித்து வாடிக்கையாளர் **NTB** அதிகாரமளிக்கின்றார்.

ஈ. வாடிக்கையாளர் மூலம் **FriMi** சேவைகளை உபயோகிக்கும் செயற்பாட்டில் மூன்றாம் தரப்பினர்கள் மூலம் அறவிடப்படக்கூடிய அனைத்து கட்டணங்களுக்கும் அறவீடுகளுக்கும் வாடிக்கையாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். சந்தேகத்தை தவிர்ப்பதற்காக, தொலைத்தொடர்பு தொழிற்படுத்துநர்கள (Telecom Operator) அறவிடப்படும் அனைத்து கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கொடுப்பனவு சாதனத்துடன் தொடர்புடைய வங்கிகளின்/நிதியில் நிறுவனங்களின் அனைத்து அறவீடுகளுக்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**10. வாடிக்கையாளரின் பொறுப்பேற்புகள்**

அ. செல்லிட சாதனத்தின் பாதுகாப்பு வாடிக்கையாளரிடம் தங்கியுள்ளது்.

ஆ. பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கும் **FriMi** மற்றும் வாடிக்கையாளயர் **FriMi** ி கணக்கு பற்றிய இரகசியத்தன்மையினையும் பாதுகாப்பினையும் வாடிக்கையாளர் பேணுதல் வேண்டும்;

i. பாதுகாப்பான விதத்தில் செல்லிட சாதனங்களை சேமித்தல்;

ii. பயனர் அடையாளங்களை இரகசியமா க பேணுதல் அத்துடன்

iii. **FriMi** சேவையினை அணுகுவதற்கு பயன்படுத்தப்படும் IMEI குறியீடுகளை பயனாளர் வேறான இடத்தில் பேணுதல்.

இ. வாடிக்கையாளர் இணைந்துள்ள NTB மூலம் வழங்கப்படும் வேறு டிஜிடல் வங்கித் தொழில் சேவைகளுக்கு நுழைவதற்கு பயனர் அத்தாட்சிகள் பயன்படுத்தப்படலாம் என்றும் ஆகையினால் எதுவாயினும் ஏதேனும் விதத்தில் பயனர் அத்தாட்சிகள் விட்டுக் கொடுக்கப்படுமாயின் அது அதிகாரமளிக்கப்படாத நுழைவிற்கு வழிவகுக்கும் என்றும் அத்தகைய டிஜிடல் வங்கித் தொழில் சேவைகளையும் பயன்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்றும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். **FriMi** ி சேவைகளை பயன்படுத்துவதற்கும் நுழைவதற்கும் தொடர்ந்து முன்னெடுக்கும் போதும் அத்தகைய இடர்நேர்வுகளை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொள்கின்றார்.

ஈ. ஏதேனும் செல்லிட சாதனம் தொலைதல் பற்றி வாடிக்கையாளர் **FriMi** உதவிக்கு அழைப்பதன் மூலம் NTB மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றி NTB ிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

உ. ஏதேனும் செல்லிட சாதனம் தொலைகின்ற சந்தர்ப்பத்தில் அத்துடன்/ அல்லது வாடிக்கையாளரின் **FriMi** கணக்கின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு விட்டுக் கொடுக்கப்படுவதற்கு அல்லது விட்டுக் கொடுக்கப்படுவதற்கு நிகழக்கூடிய சாத்தியம் காணப்படுகின்ற விடத்து அத்தகைய நிகழ்வுகளை உடனடியாக வங்கியின் கவனத்திற்கு கொண்டுவருவது வாடிக்யைாளரின் ஏக பொறுப்பாகும். குறிப்பாக அத்தகைய நிகழ்வு பற்றி NTB ிக்கு அறிக்கையிடுவதற்கு வாடிக்கையாளர் உடனயாக **FriMi** ி உதவியினை அழைத்தல் வேண்டும் என்பதுடன் பிரச்சினையை சீர்செய்வதற்கு அல்லது வேறு வகையில் கையாளும் பொருட்டு வாடிக்கையாளருக்கு NTB மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுதலும்

வேண்டும். இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள எவையேனும் வாசகங்களுக்கு பங்கமின்றி வாடிக்கையாளரின் செல்லிட சாதனத்தின் அத்துடன்/அல்லது **FriMi** ி கணக்கின் இரகசியத்தன்மையினை மற்றும் பாதுகாப்பினை பேணுவதற்கு வாடிக்கையாளர் தவறுவதன் காரணமாக வாடிக்கையாளரின் **FriMi** ி கணக்கூடாக எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆள் மூலம் செய்யப்பட்டுள்ள எவையேனும் கொடுக்கல்வாங்கல்களுக்கு வாடிக்கையாளர் பொறுப்புடையதாகவும் இருத்தலும் வேண்டும்.

ஊ. **FriMi** மீது குறித்த வாடிக்கையாளர் ஒருவரின் **FriMi** கணக்கின் ஏற்புடைய பயனாளர் அத்தாட்சிகளை பயன்படுத்தி நிறைவுசெய்யப்படுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல் அனைத்தும் நிறைவுசெய்யப்பட்டவுடன் அத்தகைய வாடிக்கையாளர் முற்றும் முடிவானதாகவும் அத்தகைய வாடிக்கையாளரை பிணிப்பதாகவும் இருப்பதுடன் அத்தகைய கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வாடிக்கையாளர் பொறுப்படையவராகவும் இருத்தலும் வேண்டும். வாடிக்கையாளரின் **FriMi** ி கணக்கிற்கு அத்துடன் /அல்லது தொடர்புடைய பயனர் அடையாளங்களுக்கு வேறு ஆள்ளெவரும் பெறுவழியினை கொண்டிருப்பதில்லையென உறுதிசெய்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். அத்தகைய பெறுவழி வழங்கப்படுமாயின், அது வாடிக்கையாளரின் ஏக இடர்நேர்விலும் பொறுப்புடையதாகவும் இருத்தல் வேண்டும்.

எ. வாடிக்கையாளரின **FriMi** கணக்கின் பெறுவழிக்கு வாடிக்கையாளர் அனுமதிக்கின்ற அல்லது வாடிக்கையாளர் பயனர் அடையாளங்களை வேறு வகையில் பயன்படுத்துகின்ற ஆள் மூலமான எவையேனும் அத்துடன் அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கும் மற்றும் பயனர் அடையாளங்களை தவறாக பயன்படுத்துவதன் எவையேனும் அத்துடன் அனைத்து விளைவுகளுக்கும் வாடிக்கையாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

ஏ. மேற்கொள்ளப்படுவது வாடிக்கையாளரின் உத்தேசிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் தான் என்பதனை உறுதிசெய்யும் விதத்தில் **FriMi** ிக்கு பதிவுசெய்யப்பட்ட அனைத்து தகவல்களினதும் செம்மையினை உறுதிசெய்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

ஐ. **FriMi** கணக்கூடாக செயலுறுத்தப்படுகின்ற எவையேனும் கொடுக்கல்வாங்கல்களின் உண்மைத்தன்மை மீது NTB மேலதிக உறுதிப்படுத்தல்களை நாடாது என்பதுடன் வாடிக்கையாளர் ஒருவரின் ஏற்புடைய பயனர் அடையாளங்கள் மூலம் செல்லுபடியாக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மேற்கொள்வதற்கு NTB பொறுப்பெதனையும் ஏற்காது.

ஒ. **FriMi** ி கணக்கின் பாதுகாப்பினை காப்பதற்கு காலத்திற்கு காலம் NTB ி மூலம் வழங்கப்படும் அனைத்து பாதுகாப்பு வழிமுறைகளையும் அத்துடன் முன் எச்சரிக்கைகளையும் வாடிக்கையாளர் உடனடியாக கடைப்பிடித்தல் வேண்டும். வாடிக்கையாளர், ஒன்றில் வாடிக்கையாளரின் சொந்த எண்ணத்தில் அல்லது NTB மூலம் அவ்வாறு செய்யுமாறு தூண்டப்படுகின்ற போது **FriMi** கணக்கிற்கு நுழைவதற்கான கடவுச் சொல்லை கிரமமாக மாற்றுவதற்கு பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும். கடவுச் சொல்லை கிரமமாக மாற்றுமாறு வாடிக்கையாளருக்கு NTB பரிந்துரைக்கின்றது. NTB மூலம் அதனை மாற்றுவதற்கு தூண்டப்படுகின்ற போது ஏற்கனவேயுள்ள கடவுச் சொல்லை தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர் தெரிவுசெய்வாராயின் அதனை வாடிக்கையாளரின் ஏக இடர்நேர்விலும் பொறுப்பிலும் செய்கின்றார்.

ஔ. இந்நியதிகளிலும் நிபந்தனைகளிலும் ஏதே னும் வேறு ஏற்பாட்டுக்கு பங்கமின்றி, பின்வரும் சந்தர்ப்பங்களில் அத்துடன் ஏற்புடைய சட்டங்களில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வேறு சந்தர்ப்பத்தில் **FriMi** ி மீது கொடுக்கல்வாங்கலொன்றை நிறைவுசெய்வதற்கு வாடிக்கையாளரின் தவறுகைக்காக எதுவாயினும் ஏதேனும் விதத்தில் NTB பொறுப்படையதாகவிராது என வாடிக்கையாளர் குறிப்பாக ஏற்றுக்கொள்கின்றார்;

(i) குறித்த வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட **FriMi** ீ நிதியியல் சேவைகளின் நோக்கெல்லைக்குள் கொடுக்கல்வாங்கல் இல்லாமை;

(ii) அதன் முழுமையான தற்றுணிபில், கொடுக்கல்வாங்கலானது சந்தேகத்திற்கிடமானது அல்லது சட்டத்திற்கு புறம்பானது என்ற அபிப்பிராயத்தை NTB கொண்டிருத்தல்;

(iii) கொடுக்கல்வாங்கலானது கொடுக்கல்வாங்கல் வரையறையினை மீறுதல்;

(iv) வணிகர் ஒருவர் அல்லது சேவை வழங்குநர் கொடுக்கல்வாங்கலை ஏற்றுக்கொள்வதற்கு நிராகரித்தல்;

(v) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு தொடர்புடைய கொடுப்பனவு சாதனத்தில் வாடிக்கையாளர் போதுமான நிதியங்கள் கிடைக்கப்பெறுவதை கொண்டிருக்காமை;

(vi) வாடிக்கையாளர் மூலம் பயன்படுத்தப்படும் செல்லிட சாதனம் **FriMi**யுடன் இணங்காமை அல்லது ஏதேனும் விதத்தில் குறைபாடாகவிருத்தல் அல்லது **FriMi** பயன்படுத்துவதற்கு வேண்டப்படும் விபரக்குறிப்புகளை நிறைவுசெய்யத் தவறுதல்;

(vii) கொடுக்கல்வாங்கலானது செயன்முறைப்படுத்தப்படுவதற்கு எத்தணிக்கின்ற வணிகரொருவரின் உபகரணம் அல்லது சேவை வழங்குநரின் வலைத்தள பிரயோகம் எதனுாடாக செய்கின்றதோ அது முறையாக தொழில்படாமை;

(viii) கொடுப்பனவு சாதனத்தை புதுப்பிக்கத் தவறுதல்;

(ix) வாடிக்கையாளர் அல்லது மூன்றாம் தரப்பினர் ஒருவர் மூலம் வழங்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் தகவல்கள் பிழையானவை அல்லது காலம் தவறியிருத்தல்; அல்லது

(x) NTB˙ கட்டுப்பாட்டை தாண்டிய சூழ்நிலைகள் காரணமாக ஏதேனும் நேரத்தில் பயன்பாட்டிற்கு **FriMi** கிடைக்கப்பெறாதிருப்பின் (வெள்ளம், அல்லது தீ) உள்ளடங்கலாக ஆயினும் அவற்றுக்கு வரையறையின்றி)

க. **FriMi** ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் நிகழ்நேரத்தில் செயலுறுத்தப்படுகின்றன என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். அதற்கமைய, தனிப்பட்ட கொடுப்பனவு சாதனங்களுக்கு ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் வெளிப்படையாக குறித்துரைத்தவை தவிர, வாடிக்கையாளர் அதன் மீது கொடுப்பனவை மேற்கொண்டவுடன் ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நிறுத்தவதற்கு அல்லது திருப்புவதற்கு NTB பொறுப்பேற்காது.

ங. **FriMi** யினை பயன்படுத்தி வணிகருடன் அல்லது சேவை வழங்குநர்களுடன் வாடிக்கையாளர் செய்துகொண்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களுக்கு வாடிக்கையாளர் NTB ீயை பொறுப்புடையதாக கொள்ளலாகாது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் நிலையிலுள்ளவாறு கொடுக்கல்வாங்கல்ளின் அனைத்து நோக்கல்களையும் நிறைவுசெய்வதைற்கும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். (அதாவது பௌதீக ரீதியான கொடுப்பனவு அல்லது பணத்தினை ஏற்றுக்கொள்ளல் அல்லது பொருட்கள்/சேவைகளை வழங்குதல் என்பன **FriMi** ஊடாக உரிய கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்றமையுடன் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்).

ச. வணிகர் ஒருவர் மூலம் வழங்கப்படும் பொருட்களின் மற்றும் சேவைகளின் தரத்திற்கு NTB ஏதேனும் பொறுப்பினை .

ஞ. NTB அதன் உற்பத்திகள் எதனையும் அல்லது மூன்றாம் தரப்பு உற்பத்திகளில் எதனையும் **FriMi** ஊடாக வாடிக்கையாளருக்கு ஊக்குவிப்பதற்கு உரித்துடையதாகவிருத்தல் வேண்டும்.

ட. **FriMi** மீது என்ரிபியின் சந்தைப்படுத்தல் பொருட்களை இலத்திரனியல் ரீதியாக காட்சிப்படுத்தல் உரிமையினை NTB கொண்டுள்ளது.

ண. **FriMi** சேவைகளுக்குள் நுழைவதற்கு அத்துடன்/அல்லது பயன்படுத்துவதற்கு தவிர, வாடிக்கையாளர் வேறு நோக்கங்களுக்கும் **FriMi** ி செயலியினை பயன்படுத்தலாகாது.

த. NTB ியின் முன்கூட்டிய எழுத்து மூல சம்மதமின்றி **FriMi** ி செயலியை அத்துடன் தகவல்களை கண்காணிப்பதற்கு அல்லது பிரதிசெய்வதற்கு வாடிக்கையாளர் ஏதேனும் தன்னியக்க சாதனங்களை அல்லது கைமுறையான செயன்முறையினை பயன்படுத்தலாகாது.

ந. வாடிக்கையாளர் கட்டுப்படுத்துகின்ற செல்லிட சாதனமொன்றின் மீது **FriMi** செயலியை பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளருக்கு மட்டுப்படுத்தப்பட்ட, மாற்றமுடியாத, கைமாற்றத்தகாத, பிரத்தியேகமற்ற உரிமை வழங்கப்பட்டுள்ளது. NTB , வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் எந்நேரத்திலும் இவ் உரிமையினை முடிவுறுத்தலாம். **FriMi** ி செயலியிலுள்ள அத்துடன் செயலிக்கான அனைத்து உரிமைகளையும், உரித்துரிமையையும் நலனையும் NTB ி தக்கவைக்கின்றது.

ப. **FriMi** செயலியானது NTB யின் அத்துடன்/அல்லது அதன் சேவை வழங்குநர்களின் அந்தரங்கமான வணிக இரகசியமொன்றாக காணப்படுகின்றது என்பதனை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். **FriMi** செயலியை அல்லது முழுமையாக அல்லது ஏதேனும் பாகத்தை வாடிக்கையாளர் திருத்தியமைத்தலோ மாற்றுதலோ, மாற்றியமைத்தலோ, பொருத்தமானவாறு ஆக்குதலோ, மொழிபெயர்த்தலோ வேறு வகையில் மாற்றுதலோ அன்றி, **FriMi** ி செயலியை முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஏதேனும் வேறு மென்பொருளுடன்/பிரயோகங்களுடன் அல்லது ஒன்றிணைப்பதற்கு அல்லது அவற்றுடன் கூட்டிணைக்கப்படுவதற்கோ அனுமதித்தலோ அன்றில் **FriMi** ி செயலியினை தொகுப்புநீக்கலோ, பிரித்தலோ அல்லது திரும்பல் பொறியியல் படுத்தலோ அல்லது அதனையொத்த தன்மையிலான ஏதேனும் நடவடிக்கைகளை நடாத்துவதற்கு எத்தணித்தலோ ஆகாது.

ம. வாடிக்கையாளர், **FriMi** செயலியின் பாதுகாப்பு தொடர்புபட்ட அம்சங்களை அல்லது ஏதேனும் சேவைநாடி நிலைவழங்குநரின் வலையமைப்பின் கணக்கின் பயனர் அடையாளங்கள் அல்லது பாதுகாப்பை அகற்றுதல், நுண்உத்தியால் மீறுதல், செயலிழக்கச்செய்தல், சேதப்படுத்தல் அல்லது வேறு வகையில் தலையிடுதலாகாது (நுண்உத்தியால் "பிளவுபடுத்தல்" அல்லது Hacking " எனக் குறிப்பீடு செய்யப்படும்).

ய. வாடிக்கையாளர் **FriMi** செயலியின் பாதுகாப்பு கட்டுப்பாடுகளை அல்லது தோற்றமைவினை கைமுறையான அல்லது தன்னியக்கமாக்கப்பட்ட கருவிகளை பயன்படுத்தி (தனியுரிமை அல்லது மூன்றாம் தரப்பு கருவிகள்) ஸ்கான் செய்யலாகாது அல்லது கணிப்பிடலாகாது.

ர. வாடிக்கையாளர்:

i. ஏதேனும் வணிக அல்லது வணிகமற்ற நோக்கங்களுக்காக **FriMi** செயலியினை மீள உருவாக்கல், பிரதிபண்ணல், விநியோகித்தல், மீள் விற்பனைசெய்தல் அல்லது வேறு வகையில் பயன்படுத்தல் ஆகாது;

ii. எவரேனும் மூன்றாம் தரப்பினர் சார்பில் அல்லது மூன்றாம் தரப்பினரின் நலனுக்காக **FriMi** ி செயலியினை பயன்படுத்துவதற்கு எவரேனும் மூன்றாம் தரப்பினரை அனுமதித்தலாகாது;

iii. ஏதேனும் ஏற்புடைய உள்ளூர், தேசிய அல்லது சர்வதேச சட்டத்தினை மீறுகின்ற ஏதேனும் விதத்தில் **FriMi** செயலியை பயன்படுத்தலாகாது.

iv. இந்நியதிகளும் நிபந்தனைகளும் மீறப்படுகின்றதென NTB கருதுகின்ற எவையேனும் நோக்கங்களுக்காக **FriMi** ி செயலியை பயன்படுத்தலாகாது;

v. **FriMi** ි செயலியின் ஏதேனும் பாகத்திற்கு மீ இணைப்பை (Hyperlink) ஏற்படுத்தலாகாது;

vi. NTBயின் முறைமைகளுக்கு அல்லது வேறு வாடிக்கையாளரின் முறைமைகளுக்கு ஏதேனும் அளவில் ஊறுவிளைவிக்க அல்லது ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியதாகவிருக்கின்றவற்றுக்கு **FriMi** ි செயலியூடாக அறிந்து கொண்டு அல்லது பொறுப்பற்ற விதத்தில் ஏதேனும் இலத்திரனியில் உள்ளடக்கத்தை (வைரஸ் உள்ளடங்கலாக) ஊடுகடத்தலாகாது.

vii. **FriMi** ි செயலியில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் பதிப்புரிமையினை, வர்த்தக நாமத்தினை அல்லது வேறு புலமைச் சொத்து உரிமை அறிவித்தல்களை அகற்றலாகாது, தடுத்தலாகாது அல்லது மாற்றுதலாகது; அத்துடன்/அல்லது

viii. விற்பனையாளர் ஆதரவளிக்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கபட்ட உள்ளமைவுகளுடனான செல்லிட சாதனத்திற்கு அல்லது வெளியில் மாற்றியமைக்கப்பட்ட ஏதேனும் சாதனத்தின் மீது, அல்லது தொழிற்பாட்டு முறைமையின் மீது **FriMi** ි செயலியினை பயன்படுத்தலாகாது. இது மாற்றியமைக்கப்பட்ட "கட்டுப்பாடு அகற்றப்பட்ட" சாதனங்களையும் உள்ளடக்கும். இந்நியதிகளின் நிபந்தனைகளின் நோக்கங்களுக்காக மாற்றியமைக்கப்பட்ட "கட்டுப்பாடு அகற்றப்பட்ட" சாதனங்கள் என்பது அவர்களது அனுமதியின்றி வாடிக்கையாளர் செல்லிட தொலைபேசி தயாரிப்பாளர் மூலம் அல்லது சேவை வழங்குநர் மூலம் விடுவிக்கப்பட்ட மட்டுப்பாடுகளிருந்து விடுவிக்கப்பட்டவை.

**ix. இரகசியத்தன்மை**

அ. **FriMi** ි வலைத்தளம், நிறுவன வலைத்தளம் அத்தடன்/அல்லது **FriMi** செயலயில் உள்ள தகவல்கள் மற்றும் ஆவணங்களீ மற்றும் அவற்றின் வடிவம், படிவம். முறை அல்லது தொகுப்பு, தெரிவு, உள்ளமைப்பு, எடுத்துரைப்பு, வெளிப்படுத்தல் முறை (கூட்டாக "இரகசியத்தகவல்கள்") என்பன NTB ˙ அத்துடன்/அல்லது மூன்றாம் தரப்பினர்களின் ("தகவல் வழங்குநர்கள்") ஆதனமாகும்.

ஆ. வாடிக்கையாளர் பின்வரும் எதனையும் செய்தல் அல்லது செய்வதற்கு எத்தணிக்கலாகாது;

i) ஏதேனும் இரகசிய தகவல்களை ஏதேனும் வடிவில் அல்லது ஏதேனும் வழிகள் மூலம் எவரேனும் வேறு ஆளுக்கு வெளியிடுதல், காட்சிப்படுத்தல், தெரியப்படுத்தல், பகிர்தல், விநியோகித்தல். ஊடுகடத்தல், ஒலிபரப்புதல். கம்பிகளுடாகப் பரப்புதல், மீளுறுவாக்குதல், விற்பனைசெய்தல், அல்லது பரவச்செய்தல்

ii) ஏதேனும் வர்த்தககுறி அல்லது பதிப்புரிமை அறிவித்தல் உள்ளடங்கலாக எவையேனும் இரகசிய தகவல்களுடன் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அல்லது தோன்றுகின்ற ஏதேனும் தனியுரிமையை அகற்றுதல், நீக்குதல், திருத்தியமைத்தல் அல்லது ஏதேனும் விதத்தில் மறைத்தல்;அத்துடன்

iii) எவையேனும் இரகசியத்தகவல்களை ஏதேனும் வேறு செய்நிரலாக்கள் தகவல்களுடன் கூட்டிணைத்தல் அல்லது ஒன்றிணைத்தல்.

இ. இரகசிய தகவல்களில் உள்ள அத்துடன் தொடர்பிலான அனைத்து உரிமைகள், உரித்துறுதிகள் மற்றும் நலன்கள் (அனைத்து பதிப்புரிமை, காப்புரிமை, வர்த்தகக்குறியீடு, சேவைக்குறியீடு, தனியுரிமை ஆதனம், வர்த்தக இரகசியங்கள் மற்றும் பிரத்தியேக பணிகள் உள்ளடங்கலாக) முறையே NTB ிக்கும் தகவல் வழங்குநர்களுக்கும் உரித்தான பிரத்தியேக ஆதனங்களாக காணப்படுகின்றன என்றும் வாடிக்கையாளர் இணங்ககின்றார்.

ஈ. தகவல்களும் அறிக்கைகளும் உசாவுகைக்காக (Reference) மாத்திரம் கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ளன. அவை வர்த்தக மற்றும் வேறு நோக்கங்களுக்காக உத்தேசிக்கப்பட்டவை அல்ல வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் தகவல்களை அறிக்கையினை கிடைக்கப்பெறச் செய்தலானது ஏதேனும் உற்பத்தியின் விற்பனையை அல்லது பரிந்துரையை கோருவதாக தன்னிச்சையாக அமையாது.

உ. ஏதேனும் தகவல் அல்லது அறிக்கையின் செம்மையினை, நம்பகத்தன்மையினை, போதிய தன்மையினை, உரிய காலத் தன்மையினை அல்லது முழுமையினை, அல்லது ஏதேனும் நோக்கத்திற்காக அவை அது பொருத்தமானது என NTB யோ தகவல் வழங்குநரோ உறுதிப்படுத்தமாட்டார்.வாடிக்கையாளருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு கிடைக்கப்பெறச்செய்யப்பட்ட ஏதேனும் தகவலுக்கு அல்லது அறிக்கைக்கு NTB யோ அன்றில் எவரேனும் தகவல் வழங்குனரோ ஏதேனும் பொறுப்பினை ஏற்கமாட்டார் (அநீதியாக இருப்பினும் சரி, ஒப்பந்தமாக இருப்பினும் சரி அல்லது வேறு பொறுப்பாக இருப்பினும் சரி).

ஊ. வாடிக்கையாளர் கட்டுப்படுத்துகின்ற செல்லிட சாதனமொன்றின் மீது **FriMi** ி செயலியை பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளருக்கு மட்டுப்படுத்தப்பட்ட, மாற்றமுடியாத, கைமாற்றத்தகாத, பிரத்தியேகமற்ற உரிமை வழங்கப்பட்டுள்ளது. NTB , வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் எந்நேரத்திலும் இவ் உரிமையினை முடிவுறுத்தலாம்.

**11. உற்பத்திகளை பரிந்துரைக்காமை**

NTB பின்வருவனவற்றுக்காக பிரநிதித்துவமளிக்காது அல்லது பரிந்துரைக்காது அத்துடன் பொறுப்புடையதாகவிராது:

(i). எவரேனும் வணிகரின் அல்லது சேவை வழங்குநரின் அல்லது மூன்றாந்தரப்பு வழங்குநரின் (**FriMi** ி உடன் இணைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு தொழிற்படுத்துநர்கள், நிதியியல் நிறுவனங்கள், சில்லறை விற்பனையாளர்கள் உள்ளடங்கலாக ஆயினும் வரையறுக்கப்படாது) நம்பகத்தன்மை அல்லது செயலாற்றம்;

(ii) **FriMi** மீது கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ள, சேமிக்கப்பட்டுள்ள அத்துடன்/அல்லது மீட்கப்பட்டுள்ள ஏதேனும் உற்பத்தியின் சேவையின், சலுகையின், விசுவாச நிகழ்ச்சித்திட்டத்தின் அல்லது வேறு விடயத்தின் அல்லது **FriMi** ஊடாக காட்சிப்படுத்தப்பட்ட அல்லது விநியோகிக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொடுப்பனவுசெய்யப்பட்ட ஏதேனும் ஆலோசனையின், அபிப்பிராயத்தின், விருப்பறிவிப்பின், முன்மொழிவின், கூற்றின், தரவுகளின் அல்லது வேறு தகவல்களின் (கூட்டாக உள்ளடக்கம்) பாதுகாப்பு, வணிகம்செய்யத்தக்க தரம், குறிப்பான நோக்கம் ஒன்றுக்கான பொருத்தப்பாடு, ஊறுபடுத்துகை, செம்மை, நம்பகத்தன்மை, நேர்மை அல்லது சட்டபூர்வமான தன்மை;

(iii) **FriMi** ியினைப் பயன்படுத்தி பொருட்களை அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கு அல்லது மீட்பதற்கு வாடிக்கையாளரின் இயலுமை. **FriMi** யின் ஏதேனும் உள்ளடக்கத்தில் ஏதேனும் வழுக்கல் அல்லது விடுபாடுகளுக்கான ஏதேனும் பொறுப்பினை அல்லது ஏதேனும் பொறுப்புடமையினை NTB இத்தால் உரிமை துறக்கின்றது. இந்நியதிகளையும், நிபந்தனைகளையும் நிராகரிக்கின்ற, பிழையான, சட்டத்திற்குப் புறம்பான மோசடியான அல்லது வேறுவகையில் மீறுகையாக காணப்படுகின்ற ஏதேனும் உள்ளடக்கத்தை அதன் தற்றுணிபில் முழுமையாக அல்லது பகுதியாக திருத்துவதற்கு, மாற்றியமைப்பதற்கு, பதிவிடலுக்கு நிராகரிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு NTB உரிமையினை கொண்டுள்ளது ஆயினும் பொறுப்பெதனையும் கொண்டிருக்காது.

**12. அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட விதம்**

அ. **FriMi** தொடர்பிலான NTB ி மூலமான அறிவுறுத்தல்கள் (நியதிகள் நிபந்தனைகளுக்கான மாற்றங்கள், கட்டணங்கள், அறவீடுகளை வெளியிடுதல் அத்துடன் **FriMi** பயன்பாட்டுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் உள்ளடங்கலாக) செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கான குறுச்செய்தி, வாடிக்கையாளரின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சலுக்கான மின்னஞ்சல், **FriMi** சேவை ஊடான

அறிவித்தல்கள், FriMi வலைத்தளத்தின் மீதான வெளியீடு அல்லது அதன் தற்றுணிபில் NTB மூலம் பொருத்தமானது என கருதுகின்ற ஏதேனும் வேறு விதம் வாயிலாக காலத்திற்கு காலம் NTB ි மூலம் மேற்கொள்ளப்படலாம்/வழங்கப்படலாம்.

அறிவித்தல்கள், வாடிக்கையாளரை உடனடியாக பிணிப்பதாக இருக்கும். அத்தகைய அறிவித்தல்களை இலத்திரனியல் ரீதியாக பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர் இ ணங்கி சம்மதம் அளிப்பதுடன் மேலே விபரிக்கப்பட்ட முறைகள் ஊடாக NTBயின் அத்தகைய அறிவித்தல்களை திறப்பதும் மீளாய்வதும் வாடிக்கையாளரின் பொறுப்பாகும். **FriMi** சேவைகளின் பயன்பாட்டினை வாடிக்கையாளர் தொடர்ந்தும் முன்னெடுப்பதானது காலத்திற்கு காலம் செயலுறுத்தப்பட்டுகின்ற நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்குமான எவேயேனும் திருத்தங்களை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆ. **FriMi** ි செயலி ஊடாக அத்துடன்/அல்லது NTB ි உடன் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஊடாக NTBிக்கு வாடிக்கையாளர் மூலம் அனுப்பப்படுகின்ற அறிவுறுத்தல்கள், கோரிக்கைகள் அல்லது அறிவித்தல்கள் (கூட்டாக “அறிவுறுத்தல்கள்”), வாடிக்கையாளரின் அதிகாரம், அறிவு அல்லது சம்மதத்துடனோ, இன்றியோ செய்யப்படுவதாயினும் சரி இல்லாவிடினும் சரி வாடிக்கையாளர் மீது பிணிப்பதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவுறுத்தல்கள் மீது செயற்படுவதற்கு வாடிக்கையாளர் இத்தால் NTBிக்கு அதிகாரமளிக்கின்றார். அத்தகைய அறிவுறுத்தல்களின் மீது செயற்படுவதற்கு நிராகரிப்பதற்கு அத்துடன்/அல்லது NTB பொருத்தமானது என்று கருத்துகின்ற விதத்தில் அத்தகைய அறிவுறுத்தல்களை உறுதிப்படுத்துவதற்கு NTB தற்றுணிபைக் கொண்டிருக்கும்.

இ. NTB மூலம் கோரப்படுமெனில், வாடிக்கையாளர் மின்னஞ்சல் அறிவுத்தல்களை உள்ளடக்குகின்ற ஏதேனும் மூல ஆவணத்தை NTBக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மூல ஆவணத்தை வாடிக்கையாளர் அனுப்பாமையில் இருந்து தோன்றுகின்ற எவையேனும் இடர்நேர்வுகளை, இழப்புகளை அல்லது பொறுப்புகளை ஏற்றல் வேண்டும்.

ஈ. அறிவுறுத்தல்களை அனுசரித்து, கொடுக்கல்வாங்கல்களை நடைமுறைப்படுத்துவதற்காக வேண்டப்பட்ட அல்லது இடர்நேர்விளைவான அனைத்து பணத் தொகைகள், கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகளை வாடிக்கையாளர் கோரிக்கையின் மீது NTB ිக்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும். NTB ියுடன் வாடிக்கையாளர் மூலம் பேணப்படுகின்ற ஏதேனும் கணக்கில் பற்றுவைப்பதன் மூலம் அத்தகைய கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளர் மாற்றமுடியாதவாறு NTB க்கு அதிகாரமளிக்கின்றார்.

உ. NTB க்கு எதிராக கொண்டுவரப்படக் கூடிய அல்லது NTB உள்ளாகிய அல்லது அதன் மூலம் உறப்பட்ட அத்துடன் NTB அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதில் இருந்து அல்லது அது தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியற்று தோன்றக்கூடிய அனைத்து நடவடிக்கைகள், நடவடிக்கைமுறைகள், உரிமைக்கோரிக்கைகள், இழப்பு, சேதங்கள், கிரயங்கள் ஆகியவற்றுக்கு எதிராக எல்லா நேரங்களிலும் NTB க்கு நடடோத்தரவாதமளிப்பதற்கும் NTB நட்டோத்தரவாதமளிக்கப்பட்டிருப்பதற்கும் அத்துடன் அவற்றில் இருந்தான ஆபத்திலிருந்து NTB யினை காப்பதற்கும் வாடிக்கையாளர் பெறுப்பேற்கின்றார்.

ஊ. NTB அதன் தற்றுணிபில், ஏதேனும் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதை நிராகரிக்கலாம் அத்துடன் அதனூடாக வாடிக்கையாளர் உட்படுகின்ற ஏதேனும் நட்டத்திற்கு அல்லது சேதத்திற்கு பொறுப்பின்றி இருக்கும் என வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

எ. **FriMi** கணக்கினை முடக்குவதற்கான, மாற்றியமைப்பதற்கான, வேறுபடுத்தவதற்கான அல்லது மீளத்தொடங்குவதற்கான எவையேனும் அறிவுறுத்தல்கள், NTB மூலம் அத்தகைய அறிவுறுத்தல்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இடம்பெறுதல் வேண்டும்.

ஏ. வாடிக்கையாளர் மூலம் அனுப்பப்படும் அறிவுத்தல்கள், எனது கணக்குகள் ஏதாவதிலிருந்து எனது பெயரில் அல்லது எவரேனும் வேறு ஆளின் பெயரில NTBயுடன் அல்லது வேறு ஏதேனும் நிதியியல் நிறுவனத்துடன் பேணப்படுகின்ற ஏதேனும் வேறு கணக்கிற்கு (கணக்குகளுக்கு) நிதியங்களின் கொடுப்பனவு அல்லது மாற்றல் அல்லது எனது பெயரில் உள்ள ஏதேனும் கால வைப்பின் புதுப்பித்தல், மீளெடுப்பு, அல்லது இரத்துச்செய்தல், இது ஏற்புடைய வட்டி வீதம் மற்றும் காலம் என்பவற்றின் உறுதிப்படுத்தலையும் உள்ளக்கலாம், என்பன உள்ளடங்கலாக, NTBயுடன் தற்போது பேணப்படுகின்ற அல்லது இதன் பின்னர் காலத்திற்கு காலம் பேணப்படவுள்ள ஏதேனும் கணக்குடன் தொடர்புபடலாம்.

ஐ. செல்லிடத் தொலைபேசிகள் தொலைதல் மற்றும் சேவைகளை முடிவுறுத்தல் அறிவித்தல்கள் உள்ளடங்கலாக ஆயினும் அவற்றுக்கு வரையறையின்றி குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு வாடிக்கையாளர் NTB ிக்கு அறிவிக்க வேண்டிய குறித்துரைக்கப்பட்ட வகை மற்றும் வடிவம் என்ற வகையில் **FriMi** ி உதவி, **FriMi** ி வெப்தளம் அத்துடன்/அல்லது **FriMi** செயலி சட்பொட் (chatbot) சேவை ஊடாக NTB அறிவுத்தல்களையும் தகவல்களையும் வழங்கும்.

ஒ. கூற்றுகள்:

(i) NTB யுடன் வேறு வகையில் இணங்கினால் தவிர, NTB **FriMi** ி சேமிப்பு கணக்கு தொடர்பில் காலமுறையான நிலுவைக் கூற்றுகளை (மாதாந்தம் அல்லது NTB மூலம் நிரணயிக்கின்றவாறான அத்தகைய வேறு இடைவெளிகளில்) வாடிக்கையாளரின் பெயர்குறிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு இலத்திரனியில் ரீதியாக NTB விநியோகிக்கும். வாடிக்கையாளர் காகித கூற்றுகளுக்காக வேண்டுவாராயின் வாடிக்கையாளர் அதனை NTB க்கு அறிவித்தல் வழங்கி, தெரிவுசெய்யலாம் என்பதுடன் அதனை வழங்குதல் NTB ியின் பொதுவான கட்டணங்களுக்கமைவாக ஏற்புடைய கட்டணங்களுக்குட்பட்டதாகவிருக்கலாம்.

(ii) வாடிக்கையாளர் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட காலமுறையான நிலுவைக் கூற்றுகளின் பிழைகளை அல்லது பூர்த்தியின்மை பற்றி வாடிக்கையாளர் கரிசனையில்கொள்ளக் கூடிய ஏதேனும் ஆட்சேபனை உடனடியாக எழுப்பப்பட வேண்டும், ஆயினும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் மூலம் அத்தகைய கூற்று கிடைக்கப்பெற்ற பின்னர் முப்பது (30) நாட்களுக்குள் எழுத்து மூலம் NTBிக்கு கிடைக்கப்பெற வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் அத்தகைய கூற்று சரியாக இருப்பதாக கருதப்படுவதுடன் வாடிக்கையாளரை பிணிப்பதாகவும் இருக்கும்.

(iii) **FriMi** சேமிப்பு கணக்கு கொடுக்கல்வாங்கல் கணக்குகள் தொடர்பில் கணக்குக் கூற்றுகளை (மேலே குறிப்பீடு செய்யப்பட்ட காலமுறையிலான நிலுவைக் கூற்றுகள் தவிர), கொடுக்கல்வாங்கல் கூற்றுகளை, அறிவிப்புகளை, கட்டளைகளை நிறைவேற்றுதலை மற்றும் அத்தகைய வேறு கூற்றுக்களை மற்றும் தகவல்களை அவை சரியானதா அத்துடன் முழுமையானதா என்பதற்கு வாடிக்கையாளர் உடனடியாக பரீச்சிக்க வேண்டும் என்பதுடன் ஏதேனும் ஆட்சேபனை உடனடியாக NTB ிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் கூற்றுக்கள், அறிவிப்புகள், தகவல்கள் வாடிக்கையாளரைப் பிணிப்பதாக கருதப்படும்.

**13. பிணக்குத் தீர்த்தல்**

அ) வாடிக்கையாளர் விசாரணைகளுக்கு பதிலளித்தல், பிணக்குகள் மற்றும் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளல் ("பிணக்கு" என கூட்டாக குறிப்பீடு செய்யப்படும்) நோக்கத்திற்காக NTB யானது **FriMi** உதவியினை தாபிக்கும்.

ஆ) **FriMi** சேவைகள் தொடர்பில் பிணக்கு ஒன்று காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் **FriMi** உதவிக்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் வாடிக்கையாளர் அதனை NTB க்கு அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன் விசாரனைக்காகவும், மேலதிக நடவடிக்கைக்காகவும் பிணக்கு NTB யின் தொடர்புடைய

திணைக்களத்திற்கு அல்லது பிரிவிற்கு அனுப்பப்படும். அனைத்து முறைப்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு NTB மூலம் உரியவாறு பின்தொடரப்படும்.

இ) பிணக்கு அறிக்கையிடப்படுகின்ற திகதியிலிருந்து மூன்று (03) வேலை நாட்களுக்குள் NTB வாடிக்கையாளருக்கு பதிலளிக்கும். இக்காலபபகுதியினுள் பிணக்கு பற்றிய விசாரணையினை முடிவுறுத்துவதற்கு NTB ீ இயலாதிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய மூன்று (03) வேலை நாட்களைக் கொண்ட காலப்பகுதயினுள் NTB வாடிக்கையாளருக்கு இடைக்கால பதிலொன்றை வழங்குவதுடன் இறுதி பதிலை NTB வாடிக்கையாளரருக்கு வழங்கக்கூடிய திகதி பற்றியும் அறிவிக்க வேண்டும். வாடிக்கையாளரின் பிணக்கு சட்டபூர்வமானது என NTB தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில், பிணக்கினைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை பற்றியும் அத்தகைய பதிலில் NTB வாடிக்கையாளருக்கு தெரியப்படுத்தும். பிணக்கொன்றிற்கு NTB வாய்மூலமாக அல்லது எழுத்தில் பதிலளிக்கலாம். அனைத்து பதில்களும் பிணக்கு அறிக்கையிடப்பட்ட அதே மொழியில் அமைந்திருக்கும்.

ஈ) **FriMi** ீ சேவைகள் இலங்கை நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்டவையாகும்.

**14. இடைநிறுத்தல் அல்லது முடிவுறுத்தல்**

அ) **FriMi** கணக்கை செயலிழக்கச்செய்ய வாடிக்கயைளார் விரும்புவாரயரின், **FriMi** ீ உதவியினை தொடர்புகொண்டு அதில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் வாடிக்கைாயாளர் அவ்வாறு செய்யலாம். **FriMi** ீ கணக்கினை முடிவுறுத்த வாடிக்கையாளர் விரும்புவாரயரின், **FriMi** உதவியினை தொடர்புகொண்டு அதில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் வாடிக்கைாயாளர் அவ்வாறு செய்யலாம்.

செல்லிடச் சாதனங்களை செயலிழக்கச்செய்ய அல்லது அகற்றுவதற்கு வாடிக்கையாளர் விரும்புவாராயின், வாடிக்கையாளர் அருகில் உள்ள கிளைக்கு வருகைதரலாம், **FriMi** க்கு அழைப்பை ஏற்படுத்தலாம், அல்லது **FriMi** செயலியில் உள்ள சேவை கோரிக்கை வசதியின் ஊடாக கோரிக்கை ஒன்றினை அனுப்பலாம்.

ஆ) **FriMi** கணக்கிலிருந்து கொடுப்பனவு சாதனமொன்றை செயலிழக்கச்செய்ய அல்லது அகற்றுவதற்கு வாடிக்கையாளர் விரும்புவாராயின், **FriMi** உதவியினை தொடர்புகொண்டு அதில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் வாடிக்கைாயாளர் அவ்வாறு செய்யலாம்.

இ) **FriMi** கணக்கின் செயலிழத்தலுக்கு அல்லது முடிவுறுத்தலுக்கு முன்னர், செலுத்தவேண்டிய எவையேனும் கட்டணங்களை அத்துடன் / அல்லது அறவீடுகளை வாடிக்கையாளர் செலுத்ததல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறுகின்றமை, அத்தகைய கட்டணங்களை அத்துடன் / அல்லது அறவீடுகளை அறவிடுவதற்கு **FriMi** ீ சேமிப்பு கணக்கில் அல்லது NTB உடன் வாடிக்கையாளர் ஆரம்பித்துள்ள ஏதேனும் வேறு கணக்கில் பற்றுவைப்பதற்கு NTB க்கு உரித்தளிக்கும்.

ஈ) **FriMi** கணக்கு செயலிழத்தலின் மீது வாடிக்கையாளர் **FriMi** சேமிப்பு கணக்கை மற்றும் **FriMi** பற்று அட்டையை பயன்படுத்துவதற்கு இயலாது இருப்பார்.

உ) வாடிக்கையாளரின் **FriMi** ீ கணக்கு முடிவுறுத்தப்பட்டதன் மீது **FriMi** சேமிப்புக் கணக்கும் **FriMi** ீ பற்று அட்டையும் மூடப்பட்டு முடிவுறுத்தப்படும்.

ஊ) வாடிக்கையாளருடன் அதன் தொழில் தொடர்பை தொடர்ந்தும் முன்னெடுப்பதை NTB யை ஏற்றுக்கொள்ள முடியாமல் ஆக்கும் ஏதேனும் நியாயமான காரணம் இருப்பின், NTB நியாயமானது என அபிப்பிராயப்பட்டு வாடிக்கையாளருக்கு அறிவித்தலை வழங்குவதன் மீது ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் அத்துடன் ஏதுவாயினும் எதேனும் காரணத்திற்கு அல்லது அறிவித்தலின்றி **FriMi** கணக்கு உள்ளடங்கலாக **FriMi** சேவைகளின்

ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை அதன் தற்றுணிபில் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கு NTB உரிமையினை கொண்டிருக்கும்

எ) வாடிக்கையாளர் அத்தகைய அட்டையினை செயற்படுத்தல் திகதியிலிருந்து ஆறு (06) மாதங்களுக்கு பயன்படுத்திருக்கவில்லையாயின், ', NTB நியாயமானது என அபிப்பிராயப்பட்டு வாடிக்கையாளருக்கு அறிவித்தலை வழங்குவதன் மீது, ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் **FriMi** பற்று அட்டையினை இடைநிறுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு NTB உரிமையினை கொண்டிருக்கும். அத்தகைய அட்டை மீது ஏதேனும் மோசடியாக கொடுக்கல்வாங்கல்கள் பற்றி அல்லது சொல்லப்பட்ட அட்டையின் பாதுகாப்பு விட்டுக்கொடுக்கப்படுகின்றது அல்லது விட்டுக்கொடுக்கப்படும் சாத்தியம் உள்ளது என NTB சந்தேகப்படுமாயின், அறிவித்தலுடன் **FriMi** ී பற்று அட்டையினை இடைநிறுத்துவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கும் NTB உரிமையினை கொண்டுள்ளது.

ஏ) மேலே குறிப்பிட்டவாறு இடைநிறுத்தல்/முடிவுறுத்தல் பற்றிய அறிவித்தல் செல்லிடத்தெலைபேசி இலக்கத்திற்கான குறுச்செய்தி, வாடிக்கையாளரின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கான மின்னஞ்சல் அல்லது **FriMi** சேவை ஊடான அறிவித்தல் அல்லது NTB மூலம் பொருத்தமானது என தீர்மானிக்கப்படும் அத்தகைய வேறு முறை ஊடாக வழங்கப்படலாம்.

மேலே விபரிக்கப்பட்ட முறைகள் ஊடாக NTB மூலம் அனுப்பப்படும் அத்தகைய அறிவித்தல்களை திறப்பதும் மீளாய்வதும் வாடிக்கையாளரின் பொறுப்பாகும். ஆயின் எவ்வாறாயினும், ஏதேனும் அத்தகைய முடிவுறுத்தலானது அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் NTB க்கு ஒன்றுசேர்ந்து இருக்கக்கூடிய ஏதேனும் உரிமைகளை பாதிக்கலாகாது என்பதுடன் வாடிக்கையாளருக்கு அல்லது எவரேனும் மூன்றாந் தரப்பினருக்கான பொறுப்பினையும் கொண்டிருக்காதிருத்தல் வேண்டும்.

ஐ. அதன் தற்றுணிபில் நியாயமான காரணத்திற்காக முன்கூட்டிய அறிவித்தல் இன்றி பதினான்கு (14) நாட்கள் அறிவித்தலை வழங்கி அல்லது ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் அல்லது எதுவாயினும் ஏதேனும் காரணத்திற்காக **FriMi** கணக்கு உள்ளடங்கலாக **FriMi** சேவைகளின் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கு வாடிக்கையாளருக்கான எவரேனும் மூன்றாந் தரப்பினருக்கான பொறுப்பின்றி NTB ී உரிமையினை கொண்டிருக்கும்.

ஒ. **FriMi** கணக்கு உள்ளடங்கலாக **FriMi** சேவைகளின் ஏதேனும் ஒன்றின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் முடிவுறுத்தலானது அல்லது இடைநிறுத்தலானது இந்நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் கீழ் ஏவையேனும் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வாடிக்கையாளரின் பொறுப்பை அல்லது ஏதேனும் வேறு கடப்பாடுகளை பாதிக்காது. முடிவுத்தலின் மீது பயனர் ஆதாரச்சான்றுகளை செயழிக்கச் செய்வதன் மூலம் அத்துடன் **FriMi** சேவைகளுக்கான மேலும் பெறுவழியினை நிராகரித்தல் உள்ளடங்கலாக அவற்றுக்கு வரையறை இன்றி **FriMi** சேவைகளுக்கான பெறுவழியினை தடைசெய்வதற்கு NTB உரிமையினை கொண்டுள்ளது.

ஓ. NTB , அதன் தற்றுணிபில் வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் வாடிக்கையாளருக்கு அல்லது எவரேனும் மூன்றாந்தரப்பினருக்கு பொறுப்பின்றி **FriMi** சேவைகளின் சிலவற்றுக்கு அல்லது அனைத்திற்கும் பெறுவழியினை கட்டுப்படுத்தல் உள்ளடங்கலாக **FriMi** சேவைகளை பயன்படுத்துவது தொடர்பில் பொதுவான நடைமுறைகளையும், வரையறைகளையும் விதிப்பதற்கு உரிமையினை கொண்டுள்ளது.

ஔ. வாடிக்கையாளர் மூலம் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீறியமைக்கு அல்லது ஏற்புடைய சட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு வாடிக்கையாளர் முரணாக செயற்பட்டமைக்கு (பணம்துய்தாக்களுக்கெதிரான சட்டவாக்கம் உள்ளடகங்கலாக ஆயினும் வரையறையின்றி) தவிர வேறு ஏதேனும் காரணத்திற்காக **FriMi** சேவைகள் முடிவுறுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் NTB யானது வாடிக்கையாளரின **FriMi** சேமிப்பு கணக்கின் வரவில் காணப்படுகின்ற ஏதேனும் நிதியங்களை (எவயேனும் கட்டணங்களை, அறவீடுகளை கழித்து), NTB யின் ஏதேனும் கிளைக்கு வாடிக்கையாளர் நேரடியாக வருகின்றவிடத்து பணமாக அல்லது கொள்வனவு கட்டளை ஒன்றினை வழங்கி NTB வாடிக்கையாளர் மூலம் இறுதியாக வழங்கப்பட்ட முகவரிக்கு அதனை அஞ்சல் செய்வதன் மூலம், வாடிக்கையாளரால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய கணக்கிற்கு

பரிமாற்றல் ஒன்றின் வாயிலாக (அத்தகைய பரிமாற்றல் தொடர்புடைய எவையேனும் செலவுகள் வாடிக்கையாளரால் ஏற்கப்படும்) நிதியங்களை விடுவிக்கும்.

க. வாடிக்கையாளர் மூலம் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீறியமைக்கு அல்லது ஏற்புடைய சட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு வாடிக்கையாளர் முரணாக செயற்பட்டமை (பணம்துய்தாக்களுக்கெதிரான சட்டவாக்கம் உள்ளடங்கலாக ஆயினும் வரையறையின்றி) காரணத்திற்காக **FriMi** ி சேவைகள் முடிவுறுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் நடாத்தப்படுகிறன்ற ஏதேனும் விசாரணை அல்லது வழக்குத்தொடுத்தல் நிறைவுசெய்யும் வரை வாடிக்கையாளரின் **FriMi** சேமிப்பு கணக்கில் உள்ள நிதியங்களின் கொடுப்பனவினை பிடித்து வைப்பதற்கும் அத்துடன்/அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரி ஒருவரினால் குறித்துரைக்கப்பட்டவாறான விதத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் NTB உரித்துடையதாக இருக்கும். NTB ி, அதன் தற்றுணிபில், அறிவித்தலுடன் **FriMi** கணக்கானது சட்டத்திற்குப்புறம்பான, அதிகாரமளிக்கப்படாத நடவடிககைகளுக்கு அல்லது சட்டத்திற்குப்புறம்பான புறம்பான நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என NTB அபிப்பிராயப்படுகின்ற சந்தர்ப்பத்தில், **FriMi** கணக்கிற்கான வாடிக்கையாளரின் பெறுவழியினை இரத்துச் செய்யலாம் அத்துடன்/அல்லது எதிர்காலத்தில் புதிய **FriMi** கணக்கினை உருவாக்குவதற்கு வாடிக்கையாளருக்கு பெறுவழியினை வழங்குவதற்கு நிராகரிக்கலாம்.

## 15. நட்டடோத்தரவாதம்

பின்வருவனவற்றில் இருந்து எழுகின்ற, பின்வருவன தொடர்பில் அல்லது பின்வருவனவற்றில் இருந்து எழக்கூடிய நட்டடோத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர்கள் மூலம் பெறப்படும் நியாயமான சட்டத்தரணி கட்டணங்கள், செலவுகள் உள்ளடங்கலாக ஆயினும் வரையரை யின்றி ஏதேனும் அத்துடன் அனைத்து உரிமைக்கோரிக்கைகள், இழப்புகள், கோரல்கள், நடவடிக்கைமுறை, பற்று அல்லது பொறுப்பு என்பவற்றில் இருந்தும் அவற்றுக்கு எதிராகவும் NTB மற்றும் அதன் துணை நிறுவனங்கள், வேறு இணை நிறுவனங்கள் அத்துடன் அதன் மற்றும் அவர்களின் பணிப்பாளர்கள், அலுவலர்கள், உரிமையாளர்கள், முகவர்கள், இணை வர்த்தகநாமத்தவர்கள், வேறு பங்காளர்கள், ஊழியர்கள், தகவல் வழங்குநர்கள், உரிமமளித்தவர், உரிமம் பெற்றவர், ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள் அத்துடன் ஏற்புடைய மூன்றாந் தரப்பினர்கள் (வணிகர்கள், சேவை வழங்குநர்கள், வேறு நிதியியல் நிறுவனங்கள் அத்துடன் வேறு வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக ஆயினும் வரையறையின்றி) (கூட்டாக "நட்டடோத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர்கள்") ஆகியோருக்கு நட்டடோத்தரவாதமளித்தல் வேண்டும், பாதுகாத்தல் வேண்டும் அத்துடன் தீங்கின்றிப் பேணுதல் வேண்டும்:

i. **FriMi** சேவைகளை வாடிக்கையாளர் பயன்படுத்த்;
ii. **FriMi** சேவைகளை பயன்படுத்துவதில் வாடிக்கைலயாளரின் புறக்கனிப்பு அல்லது தவறுகை;
iii. நியதிகள் மற்றும் நிபந்தனைகளல் வாடிக்கையாளர் மூலமான ஏதேனும் மீறுகை அல்லது இணங்காமை;
iv. வாடிக்கையாளரின் நடவடிக்கைகள் அல்லது விடுபாடுகள் மூலம் ஏற்படுகின்ற ஏதேனும் பிணக்கு அல்லது வழக்காடல் ; அத்துடன் / அல்லது
v. ஏதேனும் ஏற்புடைய சட்டத்தின் அல்லது மூன்றாந் தரப்பினரின் உரிமைகளை வாடிக்கையாளர் மீறுதல் அல்லது சாட்டப்பட்ட மீறுகை.

## 16. உரிமை துறத்தல்களும் பொறுப்பு வரையறைகளும்

ஆ) **FriMi** மீது கிடைக்கப்பெறச்செய்யப்பட்டுள்ள, அது தொடர்பில் வழங்கப்படுகின்ற அல்லது அதனூடாக அணுகத்தக்க அனைத்து உள்ளடக்கம், மென்பொருள், தொழிற்பாடுகள் அத்துடன் தகவல்கள் உள்ளடங்கலாக **FriMi** சேவைகள் "அது உள்ளது போன்று" வழங்கப்படுகின்றன. சாதனத் தயாரிப்பாளர்கள் உள்ளடங்கலாக ஆயினும் அதற்கு வரையறை இன்றி, சட்டம், NTB , மற்றும் துணை

நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் அத்துடன் அவற்றின் முகவர்கள்,இணைந்த வர்த்தக நாமத்தாரர்கள் அல்லது வேறு பங்காளர்கள் மூலம் முழுமையாக அனுமதிக்கத்தக்க அளவிற்கு **FriMi** ீ மீது பயன்படுத்தப்படுகின்ற, அதன் ஊடாக அணுகப்படுகின்ற மென்பொருள் மூலம் அணுகத்தக்கதாக ஆக்கப்பட்ட சேவைகளுக்கு அல்லது உள்ளடக்கத்திற்கு, பொருட்களுக்கு அத்துடன் தொழிற்பாடுகளுக்கு அல்லது **FriMi** ஊடாக உணர்திறன்மிக்க தகவல்களை ஊடுகடத்துவதற்கு ஏதேனும் பாதுகாப்பு மீறலுக்கு பிரதிநிதித்துவம் எதனையும் அல்லது உத்தரவாதம் எதனையும் அளிக்கமாட்டர். சேவைகள், மீறாமை, வணிகம்செய்யத்தக்க தன்மை அல்லது குறித்த நோக்கத்திற்கான பொருத்தப்பாடு தொடர்பில் ஏதேனும் வகையான உத்தரவாதம் எதற்கும் ஒவ்வொரு NTB தரப்பினரும் வரையறை இன்றி உரிமை துறக்கின்றனர். **FriMi** யில் உள்ள தொழிற்பாடுகள் இடையூறுகள் அற்றிருப்பதற்கு அல்லது பிழைகள் இல்லாதிருப்பதற்கு NTB தரப்பினர்கள் உத்தரவாதமளிப்பதில்லை. கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களின், ஒருவரிடம் இருந்து மற்றவருக்கான கொடுப்பனவின் அல்லது **FriMi** ீ யின் கிடைப்பனவை, செயன்முறைப்படுத்தலை, ஏற்றுக்கொள்ளலை, பூர்த்திசெய்தலை அல்லது தீர்ப்பனவை பாதிக்கக் கூடிய முறைமை செயலிழப்பு அல்லது வேறு இடையூறுகள் உள்ளடங்கலாக ஆயினும் அவற்றுக்கு வரையறையின்றி ஏதேனும் சேவை இடைத்தடங்களுக்கு NTB தரப்பினர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கமாட்டார்.

ஆ. அவ்வாறான தகவல்கள் நடைமுறையில் உள்ளதாயினும் சரி இன்றைவரையானதாயினும் சரி அவை உள்ளடங்கலாக ஆயினும் வரையறையின்றி ஏதேனும் கொடுப்பனவுச் சாதனம் தொடர்பில் ஏதேனும் தகவலின் செம்மைக்கு NTB தரப்பினர்கள் பொறுப்புடையவர் அல்லர். முற்போர்ந்த வாக்கியத்தின் பொதுவான பிரயோகத்திற்கு வரையறையின்றி, அத்தகைய தகவல் வழங்குனர் மூலம் தாபிக்கப்பட்ட குறித்த நேரமொன்றிலிருந்து வழங்குனர் மூலம் அறிக்கையிடப்படுவது என்றும் **FriMi** ஊடாக வாடிக்கையாளர்களுக்கு அவை காண்பிக்கப்படுகின்ற நேரத்தில் அல்லது கொள்வனவினை அல்லது மீட்பினை வாடிக்கையாளர் மேற்கொள்கின்ற நேரத்தில் வாடிக்கையாளரின் நடப்பு கொடுக்கல்வாங்கலை, கிடைக்கப்பெறுகின்ற மீதியினை அல்லது வேறு கணக்கினை அல்லது செய்நிரலாக்கல் விபரங்களை செம்மையாக பிரதிபலிக்காமல் இருக்கலாம் என்றும் வாடிக்கையாளர் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு இணங்குகின்றார். அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் விளைவாக அத்துடன்/அல்லது வாடிக்கையாளருக்கு கட்டணங்களை வேறு அறவீடுகள் ஏற்படலாம் என்பதுடன் கொள்வனவொன்றை அல்லது மீட்பொன்றை மேற்கொள்வதற்கான வாடிக்கையாளரின் எத்தணிப்பு வெற்றியடையாதிக்கலாம்.

இ. NTB தரப்பினர் அத்தகைய சேதம் அல்லது இழப்பு பற்றிய சாத்தியம் பற்றி ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் கூட கோரிக்கையின் வகை அல்லது நடவடிக்கை முறையின் தன்மை என்பவற்றை பொருட்படுத்தாது ஏதேனும் NTB ீ தரப்பினர் அல்லது **FriMi** தொடர்பில் அல்லது **FriMi** வாயிலாக கொள்வனவு செய்யப்பட்ட, கிடைக்கப்பெற்ற, விற்பனை செய்யப்பட்ட, கொடுப்பனவு செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள், சேவைகள் அல்லது தகவல்கள் தொடர்பில் பெறப்படக்கூடிய இலாபங்கள், நற்பெயர், பயன்பாடு, தரவு இழப்புகளுக்கு அல்லது வேறு புலப்படாத இழப்புகளுக்கான சேதங்கள் உள்ளடங்கலாக ஆயினும் அவற்றுக்கு வரையறையின்றி ஏதேனும் நேரடியற்ற, விளைவாந்தன்மையுடைய, விசேட அல்லது ஊறுவிளைவிக்கத்தக்க சேதங்களுக்கான அல்லது இழப்புகளுக்கான ஏதேனும் சூழ்நிலையின் கீழ் வாடிக்கையாளருக்கு அல்லது எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு எவரேனும் NTB தரப்பினர் பொறுப்படையதாகவிருக்கின்ற அல்லது பொறுப்பாகவிருக்கின்ற நிகழ்தகவு எதுவும் இல்லாதிருத்தல் வேண்டும். உரிமைக் கோரிக்கை தொடர்பில் கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் ஒன்றின் பெறுமதியை நியதிகள் மற்றும் நிபந்தனைகளிலிருந்து அல்லது தொடர்பில் தோன்றுகின்ற NTB தரப்பினர்களின் மொத்த ஒன்றுசேர்ந்த பொறுப்பு விஞ்சியிருக்கின்ற நிகழ்வு எதுவும் இருத்தலாகாது.

ஈ. இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை ஏனைய தரப்பினர் அதில் குறிப்பிடப்பட்ட பொறுப்பு வரையறைகளை சார்ந்து கையொப்பமிட்டுள்ளாரென்றும் அவ்வரையறைகள் தரப்பினர்களுக்கிடையில் பேரம்பேசும் அத்தியாவசிய அடிப்படை என்றும் ஒவ்வொரு தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர். முற்போர்ந்தவற்றில் எதற்கும் மேலதிகமாகவும் வரையறையின்றியும் NTB தரப்பினர் எவரும் அரசாங்கம்சார் நடவடிக்கை அல்லது பயங்கரவாத செயற்பாடுகள், பூகம்பம், தீ, வெள்ளம் அல்லது வேறு இயற்கை அனர்த்தங்கள், தொழிலாளர் நிலமைகள், சக்தி செயலிழப்புகள், மற்றும் இணைய இடைத்தடங்கல்கள் உள்ளடங்கலாக அவற்றுக்கு வரையறையின்றி ஒவ்வொரு தரப்பினரதும் நியாயமான கட்டுப்பாட்டுக்கு அப்பாலான ஏதேனும் நிலமையில்

இருந்து விளைகின்ற ஏதேனும் செயலிழப்பு அல்லது தாமதத்திற்கு எவ்வித பொறுப்பினையும் கொண்டிருக்க மாட்டர்.

**17. நானாவிதமானவை.**

அ. **FriMi** சேமிப்புக் கணக்கிற்குரான தவறான பதிவுகள், குறித்த காலமுறை நிலுவைக் கூற்று வழங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ மேலதிக பதிவொன்றின் ஊடாக (“திரும்பல் பதிவு”) NTB மூலம் திரும்பல் செய்யப்படலாம், சரிசெய்யப்படலாம் அல்லது இரத்துச்செய்யப்படலாம். வட்டிக் கணக்கீடு தொடர்பில் (அல்லது வேறு ஆதாயம்) NTB தவறான பதிவு எத்திகதியில் மேற்பட்டதோ அத்திகதியில் உள்ளவாறு பதிவுகளை பின்னோக்கி மேற்கொள்ளும்.

ஆ. பணம் அனுப்பல்கள்;

i. **FriMi**ෆි சேமிப்புக் கணக்கிலிருந்து வெளிநாட்டு நாணயத்திலான பணம் அனுப்பல்கள்/ வரைவுகள் வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த இடர்நேர்வில் அனுப்பபடும்.

ii. NTB மூலம் அத்தகைய நிதியங்கள் உண்மையாக கிடைக்கப்பெற்ற நாளன்று NTB யின் விற்பனை வீதத்தில் பணம் அனுப்பப்பட்ட நிதியங்களை பணம் அனுப்பலின் நாணயமாக சாதாரணமாக மாற்றும். எனினும், மாற்றல் மற்றும் பரிமாற்றல் திகதிகள் ஒட்டுமொத்தமாக NTB யின் தற்றுணிபில் அமைந்திருக்கும்.

iii. பணம் அனுப்பலொன்றை இரத்துச்செய்யும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய வங்கியிடமிருந்து உண்மையாக கிடைக்கப்பெற்ற தொகையின் அடிப்படையில் மாத்திரம் மீளளிப்பு மேற்கொள்ளப்படும் என்பதுடன் மீளளிப்பு நாளன்று NTB யின் வாங்கும் விகிதத்தில் அமைந்திருக்கும். அதன்மீது, அதன் தொடர்புடையவர் முகவர்கள் மீது அவ்வாறு ஏற்பட்ட செலவுகளுக்கு மீள்நிரப்பல் செய்வதற்கு NTB ෆි உரித்துடையதாகவிருக்கும். சேகரிக்கப்பட்ட அனைத்து இரத்துச்செய்தல் கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் தரகுகள் மீளளிக்கத்தகாதவையாகும்.

iv. கொடுப்பனவில் அல்லது கொடுப்பனவு பற்றிய அறிவித்தலினை வழங்குவதில் தாமதம் காரணமாக ஏதேனும் இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு, கொண்டு செல்கையில் அல்லது வேறு வகையில் பொருட்கள் இழப்பிற்கு, உருச்சிதைவிற்கு, தவறான விடுபாடுகளுக்கு, ஊடுகடத்தலில் அல்லது ஏதேனும் பொருட்களை, கடிதங்களை ஒப்படைப்பதில் தாமதம் அல்லது NTB யில் தொடர்புடையவர்களின் அல்லது முகவர்களின் நடவடிக்கைகள் காரணமாக ஏதேனும் இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு NTB பொறுப்புடையதாகவிராது

v. ஒவ்வொரு வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் NTB பொறுப்புக்கூறாத வெளிநாட்டு செலாவாணி இடர்நெர்வுகளை ஈடுபடுத்தக்கூடும் என்ற முழுமையான விழிப்புணர்வுடன் ஒவ்வொரு நாணய கொடுக்கல்வாங்கல்களையும் வாடிக்கையாளர் மேற்கொள்வார்.

இ. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள்:

i. அத்தகைய நேரத்தில் அத்தகைய வசதி கிடைக்கப்பெறுகின்றமைக்காக கொடுப்பனவு சாதனம் ஒன்றினை பற்றுவைப்பதன் மூலம் **FriMi** ෆි செயலியூடாக வாடிக்கையாளர் ஒருநேர அல்லது மீண்டெழும் கொடுப்பனவுகளை அட்டவணைப்படுத்தலாம் (“அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவு”).

ii. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளும் அத்துடன் காசோலை கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக NTBயுடன் ஏதேனும் வேறு ஏற்கனவே காணப்படுகின்ற கொடுப்பனவு ஏற்பாடுகளும், நிதியங்கள் கிடைக்கப்பெறுகின்றமைக்கும் அத்துடன் NTB யன் தொடர்புடைய சேவை நியமங்களுக்குட்பட்டு “முதல் வந்தது முதலாவது சேவையளிக்கப்படும்” அடிப்படையில்” கையாளப்படும்.

iii. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவு செயலுறுப்படுத்தப்படுவதற்கு தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் சாதனத்தில் வாடிக்கையாளர் போதுமான நிதியங்களை கிடைக்கப்பெறச்செய்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவொன்றினை செயலுறுத்துவதற்கு போதுமான நிதியங்கள் கிடைக்கப்பெறாவிடின் உரிய திகதியன்று அதனை மேற்கொள்வதற்கு NTB பொறுப்பேற்காது. கொடுப்பனவானது அதன் உள்ளக நடைமுறைகளுக்கமைவாக அத்தகைய கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு NTB எத்தனிக்கின்ற நேரத்தின் போது அதனைத் தொடர்ந்து நிதியங்கள் கிடைக்கப்பெறச் செய்திருப்பின் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

iv. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் நடைமுறைக்கு வருவதற்கான செயலுறு திகதியினை தெரிவுசெய்கின்ற போது மேலே இ) (iii) ஆம் வாசகத்திற்குட்பட்டு வாடிக்கையாளரின் மரணம்/வங்கரோத்துநிலை/உளரீதியான இயலுமை பற்றிய அறிவித்தலை வங்கி பெற்றுக் கொண்டாலன்றி, அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளை வாடிக்கையாளர் இரத்துச்செய்தாலன்றி அல்லது தொடர்புடைய கொடுப்பனவுச் சாதனம் செயற்பாடற்றதாகினாலன்றி வாடிக்கையாளர் மூலம் தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய திகதியின்று நடைமுறைக்கு வரும் என்பதுடன் அத்தகைய காலப்பகுதிக்கு வலுவில் இருக்கும் என்பதனை வாடிக்கையாளர் மனதில் கொள்ள வேண்டும்.

v. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளுக்காக **FriMi** ினை வாடிக்கையாளர் பயன்படுத்தியமை காரணமாக, நிறைவேற்றாமை, நிறைவேற்றுவதில் தாமதம் காரணமாக அத்துடன்/அல்லது வாடிக்கையபாளரின் அறிவுறுத்தலளுக்கமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளை NTB மேற்கொண்டமை காரணமாக வாடிக்கையாளருக்கான ஏதேனும் விளைவாந்தன்மையுடைய இழப்பு அல்லது சேதம் உள்ளடங்கலாக இழப்பிற்கு அத்துடன்/அல்லது சேதத்திற்கு NTB பொறுப்புடையதாகவிராது. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் செம்மையான அறிவுறுத்தல்களை வழங்கவதற்கும் அத்தகைய அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளை கண்காணிப்பதற்கும் அத்துடன் போதிய நிதியங்களை பேணுவதற்கும் வாடிக்கையாளர் முழுப் பொறுப்பினையும் கொண்டுள்ளார். அது தொடர்பில் வாடிக்கையாளரின் எவையேனும் பிழைகளுக்கு/ விடுபாடுகளுக்கு NTB பொறுப்புடையதாகாது.

vi. 9 ஆம் வாசகத்தில் மேலும் விபரிக்கப்பட்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளுக்காக கட்டணங்களை மற்றும்' அறவீடுகளை விதிப்பதற்கு NTB உரிமையினை கொண்டிருக்கும்.

vii. தகவல்கள் தொடர்புடைய கொடுப்பனவு சாதனத்தின் கூற்றிலும் **FriMi** செயிலியின் விபரங்களிலும் கிடைக்கப்பெறும் என்பதால் அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவு அனுப்பப்படுதலுடன் இணங்கியொழுகப்பட்டுள்ளது என்ற வேறான அறிவித்தல் வழங்கப்படாது.

viii. அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அதன் நியம சேவை மட்டங்களுக்கமைவாக NTB மூலம் மேற்கொள்ளப்படும்.

ஈ இதில் விபரிக்கப்பட்ட ஏதேனும் சேவையினை பயன்படுத்தி செயன்முறைப்படுத்தப்படும் கொடுக்கல்வாங்கல்களில் தோன்றுகின்ற வாடிக்கையாளருக்கு வருமதியான நிதியங்களை **FriMi** வைத்திருக்குமெனில் அத்துடன் ஏற்புடைய சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகதிக்காக வாடிக்கையாளரின் சேவைப் பயன்பாட்டு பற்றிய பதிவுகள் எதனையும் கொண்டிருக்காவிடின் NTB உரிமை கோரப்படாத அல்லது கைவிடப்பட்ட ஆதனமாக இலங்கை மத்திய வங்கி போன்ற ஒருங்குமுறைப்படுத்துனர்களுக்கு அறிக்கையிடுவதற்கும் அந்நிதியங்களை இறுதியாக கையளிப்பதற்கும் வேண்டப்படலாம். வாடிக்கையாளருக்கான அறிவித்தலுடன் NTB ஏற்புடைய சட்டங்கள் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு அத்தகைய உரிமைகோரப்படாத நிதியங்களிலிருந்து செயற்பாடற்ற கட்டணம் ஒன்றை அல்லது வேறு நிருவாக அறவீடுகளை கழிப்பதற்கான உரிமையினை கொண்டுள்ளது.

உ. கணக்கில் இருபத்திநாலு (24) மாதங்களில் வாடிக்கையாளரால் உருவாக்கப்பட்ட செயற்பாடு எதுவும் காணப்படாதவிடத்து அல்லது செயற்பாடற்ற வகைப்படுத்தலுக்கு பொருத்தமானதென NTB ி கருதுகின்ற ஏதேனும் வேறு காரணத்துக்காகவிருப்பின் **FriMi** சேமிப்புக் கணக்கு செயற்பாடற்றிருப்பதாக கருதப்படும். செயற்பாடற்ற கணக்கை மீளச் செயற்படுத்துவதற்கு NTB யானது வாடிக்கையாளரை நேர்கண்டு செயற்பாடற்ற நிலமை தொடர்பில் தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்ளலாம். வாடிக்கையாளர் NTB ிக்கு அத்தகைய

தெளிவுபடுத்தல்களை வழங்குவார். NTB அதன் தற்றுணிபில், செயற்பாடற்ற **FriMi** சேமிப்புக் கணக்கை மீளச் செயற்படுத்துவதற்கு முன்னர் NTB மூலம் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை எ NTBிக்கு சமர்ப்பிக்குமாறு வாடிக்கையாளரை கோரலாம்.

**FriMi** சேமிப்புக் கணக்கு செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய செயற்பாடற்ற நிலை அகற்றப்பட வேண்டுமென அது திருப்தியடையும் வரையில் அத்தகைய கணக்கு மீது வரையப்பட்ட காசோலைகளின் கொடுப்பனவு உள்ளடங்கலாக அத்தகைய கணக்கு மீதான கொடுக்கல்வாங்கல்களை நிராகரிப்பதற்கு NTB உரிமையினை கொண்டிருக்கும்.

ஊ. ஏற்புடைய சட்டங்களுக்கு உட்பட்டும் அமைவாகவும் (குறிப்பாக சிவில் நடைமுறை கோவையின் 544 ஆம் பிரிவு) வாடிக்கையாளரின் மரணத்தின் மீது வாடிக்கையாளரின் **FriMi** சேமிப்புக் கணக்கின் வரவில் காணப்படுகின்ற அனைத்து பணத் தொகைகளையும் உரிமை கோருவதற்கு அத்துடன் மாற்றல்செய்யப்படுவதற்கு அல்லது கொடுப்பனவு செய்வதற்கு (அனைத்து நிலுவையாகவுள்ள கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் கொடுப்பனவின் பின்னர்) பயன்பெறுனர் ஒருவரை பெயர்குறிக்கலாம்.

எ. **FriMi** பயன்பாட்டிலிருந்து தோற்றுகின்ற ஏதேனும் ஏற்புடைய வரிகளை அறிக்கையிடுதலும் செலுத்துதலும் வாடிக்கையாளரின் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும். **FriMi** பயன்பாடு தொடர்பில் ஏதேனும் அத்துடன் அனைத்து வரிச் சட்டங்களுடனும் வாடிக்கையாளர் இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஏ. NTB , அதன் தற்றுணிபில் அத்துடன் வாடிக்கையாளருக்கு ஏதேனும் பொறுப்பின்றி வாடிக்கையாளருக்கான அறிவித்தல் மூலம் எந்நேரத்திலும் இந்நியதிகளின் நிபந்தனைகளின் ஏதேனும் பாகத்தை மாற்றுவதற்கு, திருத்தியமைப்பதற்கு அல்லது திருத்துவதற்கு உரிமையினை கொண்டிருக்கும்.

ஐ. NTB , அதன் தற்றுணிபில் அத்துடன் வாடிக்கையாளருக்கு ஏதேனும் பொறுப்பின்றி வாடிக்கையாளருக்கான அறிவித்தல் மூலம் எந்நேரத்திலும் **FriMi** சேவைகளை மாற்றுவதற்கு திருத்தியமைப்பதற்கு அல்லது திருத்துவதற்கு உரிமையினை கொண்டிருக்கும்.

ஒ. அதன் தற்றுணிபில் NTB கருதுகின்றவாறு அத்தகைய நோக்கத்திற்கு/நோக்கங்களுக்கு வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் எவையேனும் கொடுக்கல்வாங்கல்கள் அத்துடன்/அல்லது எவையேனும் கொடுப்பனவுச் சாதனங்கள் பற்றிய தகவல்களை பதிவுசெய்வதற்கு அத்துடன்/அல்லது வெளிப்படுத்துவதற்கு வாடிக்கையாளர் இத்தால் சம்மதமளித்து NTB அதிகாரமளிக்கின்றார். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தில் (CRIB) வாடிக்கையாளரொருவரின் கொடுகடன் தகவல்களை NTB மதிப்பிடுவதற்கும் வாடிக்கையாளர் சம்மதமளிக்கின்றார்

ஓ. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டை தரவு உறுதிப்படுத்தல் - இணையவழிச் சேவையிலிருந்து வாடிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை தொடர்பிலான விபரங்களின் அத்தாட்சிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர் இத்தால் சம்மதமளித்து NTB க்கு அதிகாரமளிக்கின்றார்.

ஔ. அத்தகைய முறைமையினை வழங்குகின்ற அத்துடன் அத்தகைய வாடிக்கயைாளரின் விபரங்களுக்கு பெறுவழியினைக் கொண்டிருக்கக்கூடிய NTB யின் வழங்குநரின் காணொளியாக உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் உறுதிப்படுத்தல் முறைமை மீது பெயர், தொலைபேசி இலக்கம், மற்றும் பணப்பை அடையாளம் போன்ற வாடிக்கயைாளரின் விபரங்கள் பதிவுசெய்யப்படலாம் என்றும் வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்கின்றார். வங்கியின் உள்ளகக் கொள்கைகளுக்கமைவாகவும், அதேபோன்று காணொளியாக உங்கள் வாடிக்கையாளரை தெரிந்தகொள்ளுங்கள் ஊடாக கணக்கு ஆரம்பிக்கும் நோக்கத்திற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைவாகவும் வாடிக்கயைாளரின் விபரங்கள் உறுதிப்படுத்தப்படுவது முக்கிய பாகமாக இது இருப்பதனால் அத்தகைய தகவல்கள் அத்தகைய விதத்தில் பதிவுசெய்யப்படுவதற்கு வாடிக்கயைாளர் இத்தால் சம்மதமளித்து அதிகாரமளிக்கின்றார்.

க. NTB , வாடிக்கயைாளருக்கான அறிவித்தலுடன் FriMi ிக்கு காலத்திற்கு காலம் பல்வேறு சேமிப்பு உற்பத்திகளை மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தலாம், அது இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, வேறான நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டிருக்கலாம்.

NTB உடன் பேணப்படுகின்ற வாடிக்கயைாளரின் ஏதேனும் கொடுப்பனவுச் சாதனத்தில் பற்றுவைப்பதன் மூலம் காலத்திற்கு காலம் நிலையான வைப்புகளை இடம்பெறச்செய்வதற்கு FriMi ஊடாக வாடிக்கயைாளர் அறிவுறுத்தல்களை வழங்கலாம். FriMi ஊடாக ஆரம்பிக்கப்படும் நிலையான வைப்புகளுக்கு ஏற்புடைய வட்டி வீதம் NTB இல் வேறு வழிகள் மூலம் ஆரம்பிக்கப்படுகின்ற நிலையான வைப்புகளுக்கு ஏற்புடைய வட்டி வீதங்களில் இருந்து வேறுபடலாம் என வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

ங. NTB யின் முன்கூட்டிய எழுத்திலான அறிவித்தலின்றி சட்டத்தின் தொழிற்பாட்டின் மூலம் அல்லது வேறுவகையில், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் FriMi கணக்கை அல்லது ஏதேனும் உரிமைகளை அல்லது கடப்பாடுகளை சாட்டுதல் செய்யலாகாது அத்துடன் ஏதேனும் அத்தகைய எத்தனிக்கப்பட்ட சாட்டுதலானது வறிதானதாகவிருத்தல் வேண்டும். இதன் கீழான நியதிகளை மற்றும் நிபந்தனைகளை, உரிமைகளை அல்லது கடப்பாடுகளை அறிவித்தலின்றி அல்லது சம்மதமின்றி எவரேனும் மூன்றாம் தரப்பினருக்குத் தங்குதடையின்றி சாட்டுதல் செய்வதற்கு NTB உரிமையினைக் கொண்டிருக்கும். மேற்போர்ந்தவற்றுக்குட்பட்டு, இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகள், இதற்கான தரப்பினர்கள், பின்னுறுபவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட சாட்டுதல்காரர்கள் ஆகியோரைப் பிணிப்பதாகவும் அவர்களின் நன்மைக்காக ஏற்றுக்கொள்ளச் செய்யப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

ச. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொண்டுள்ளாரா என்பதனை நிர்ணயிப்பதற்கு உதவுவதற்கு NTB “குக்கீஸ்” களைப் பயன்படுத்தவதற்கு வாடிக்கயைாளர் அனுமதிக்கின்றார். குக்கீஸ் என்பது வாடிக்கயைாளரின் செல்லிட சாதனத்தில் NTB யின் வலைத்தள சேமிப்பகம் இடம்பெறச்செய்கின்ற சிறிய கோவைகளாகும்.

ஞ. FriMi ி செயலி ஊடாக வழங்கப்பட்டுள்ள பல்வேறு ஏனைய பொருட்களுடன் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள், அத்தகைய நேரத்தில் தொடர்புடைய நியதிகளை மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் அத்தகைய பொருளை/சேவையை பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கயைாளர் பதிவுசெய்வாராயின் மற்றும் பதிவுசெய்கின்றபோது மாத்திரம் வாடிக்கையாளர் மீது பிணித்தல் வேண்டும்.

ட. இந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, NTB யின் பொதுவான வியாபார ் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மூலம் வாடிக்கையாளர் பிணிக்கப்பட்டிருப்பார். வியாபார ியின் https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions.pdf என்ற நிறுவன வலைத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் வாயிலாக இதனைப் பார்வையிடலாம். நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பாக உள்ளடக்கப்படாத ஏதேனும் கருமத்திற்கான வாடிக்கையாளர் பொதுவான வியாபார ் நிபந்தனைகளை வாசிக்க வேண்டும்.

ண. வாடிக்கயைாளருக்கு வியாபார மூலம் FriMi ி சேவைகளின் வழங்கலும் அத்துடன் இந்நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.